Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 50

பக்கங்கள் 12

சுடர் : 38
கதிர் : 06

வெள்ளிக்கிழமை 02 டிசெம்பர் 2022

கார்த்திகை 16 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2053



## ரயிலுடன் மோதியதில் நொருங்கியது வாகனம்

### சாரதி சம்பவ இடத்தில் பலி!

யாழ்ப்பாணம், டிசெ. 2
யாழ்ப்பாணம், அரியாலை பகுதியில் ரயில் - வாகனம் என்பன நேற்று நண்பகல் வேளையில் மோதி விபத்துக்குள்ளானதில், வாகனச் சாரதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். தனபாலசிங்கம் சுரேந்தர் (வயது-31) என்பவரே உயிரிழந்தவராவார்.
குறித்த விபத்து இடம்பெற்ற பாதுகாப்பற்ற ரயில் கடவையில் இதற்கு முன்னரும் பல விபத்துகள் இடம்பெற்றுள்ளன. இதனால் அந்தக் கடவையை பாதுகாப்பான ரயில் கடவையாக மாற்ற வேண்டும் என்று பொதுமக்கள் பல தடவைகள் வலியுறுத்தி வந்துள்ளனர். இதற்காக அந்தப் »11

இலங்கையிலிருந்து

# 56 வீதமான மக்கள் வெளியேறத் தயார்!

### ஆய்வில் அதிர்ச்சித் தகவல்

**கொழும்பு, டிசெம்பர் 2**

**பொருளாதார நலிவால் 56.8 வீதமான மக்கள் இலங்கையிலிருந்து வெளியேறி பிறநாடுகளில் வாழ்வதற்கு விரும்புகின்றனர் என்று கருத்துக்கணிப் பொன்றில் தெரியவந்துள்ளது.** »11

## குளத்தில் நீராடியவர் சடலமாக நேற்று மீட்பு

யாழ்., டிசெ. 2
குளத்தில் குளிக்கச் சென்றவர் நீரில் மூழ்கி உயிரிழந்த »11

## வவு. இரட்டைக் கொலை வழக்கு; குற்றவாளிக்கு இரட்டைத் தூக்கு!

வவுனியா, டிசெ. 2
தம்பதியரைக் கொலைசெய்து நகைகளை கொள்ளையிட்ட குற்றவாளிக்கு இரட்டைத் தூக்குத் தண்டனை வழங்கி வவுனியா மேல் நீதிமன்ற »11

## பொட்டாசியம் இன்மை நெற்பயிர்களில் அழிவு

யாழ்ப்பாணம், டிசெ. 2
பொட்டாசியம் பற்றாக்குறையால், யாழ்ப்பாணத்தில் செய்கை செய்யப்பட்ட நெற்பயிர்களின் நுனிப் பகுதிகளில் கருகல் தன்மை ஏற்படுவது பரவலாக அவதானிக்கப்பட் »11

## போதையை எதிர்ப்பதற்கு முழுமையான படைபலம்!

### பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

(விரிவு:- பக்.11)

சமுர்த்திப் பயனாளிகள் விவரம்;

## பொருத்தமற்றோரை நீக்க உடனடியாக நடவடிக்கை!

### ஜனாதிபதி நேற்றுத் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 2
சமுர்த்தி பெறும் பட்டியலில் இருந்து தகுதியற்றவர்களை நீக்குவதற்கு உடன் நடவடிக்கை எடுக்கப்படும். குறித்த பட்டியல் மீளாய்வுக்கும் உட்படுத்தப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
'பொருத்தமற்றவர்களும் சமுர்த்தியைப் பெறுகின்றனர். இதனால் சமுர்த்தியைப் »11

சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட

## கடலட்டைப் பண்ணைக்கு எதிராக இன்று போராட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 2
அனலைதீவில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள கடலட்டைப் பண்ணைகளுக்கு எதிராக இன்று பெரும் போராட்ட »11

## அடுத்தாண்டு மார்ச் மாதம் மிகப்பெரும் மின்நெருக்கடி

### கம்மன்பில எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 2
உலக சந்தையில் எரிபொருள் விலை அதிகரிப்பு, நீர் மற்றும் அனல்மின் உற்பத்தியில் »12

திண்மக்கழிவகற்றல் சர்ச்சை;

## மாநகரசபை நேற்று வழக்குத்தாக்கல்!

### வலி.தென்மேற்கு பிரதேசசபை நேற்றும் போராட்டம்



யாழ்ப்பாணம், டிசெ. 2
யாழ்ப்பாணம் மாநகரசபையின் கழிவகற்றல் செயற்றிட்டத்துக்கு இடையூறு விளைவித்தனர் என்று தெரிவித்து வலி. தென்மேற்கு பிரதேசசபைக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றத்தில் யாழ்ப்பாணம் »11

மின்கட்டண அதிகரிப்பு

## மக்களை வதைத்தெறியும் மனிதத்தன்மையற்ற முடிவு



### சஜித் நேற்று ஆவேசம்

கொழும்பு, டிசெ. 2
மின் கட்டணம் அதிகரிப்புத் தொடர்பான திட்டத்தை அரசாங்கம் கைவிடவேண்டும். இது மக்களை »11

Digitized by Noolaham Foundation.

# பலாலி விமான சேவை
# 12 முதல் மீள ஆரம்பம்!

யாழ்ப்பாணம், டிசெ.2

யாழ்ப்பாணம் – சென்னை விமான சேவை எதிர்வரும் 12ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப் படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.



அதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக சுற்றுலா அதிகார சபையில் இருந்து இரு அதிகாரிகள் யாழ்ப்பாணம் விமான நிலையத்துக்குச் சென்று நிலைமைகளை ஆராய்ந்துள்ளனர்.

அதேவேளை, விமான சேவைகளுக்கான விமானச் சீட்டு முன்பதிவு நேற்றுமுதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. 2019ஆம் ஆண்டு திறக்கப்பட்ட யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் 2020ஆம் ஆண்டு மார்ச் மாதம் கொரோனாத் தொற்றுப் பரவல் காரணமாக மூடப்பட்டது. அதன்பின்னர் அது இயங்கவில்லை. (எ-இ)

## பல மாதங்களின் பின் பணவீக்கத்தில் வீழ்ச்சி

கொழும்பு, டிசெ.2

கடந்த செப்ரெம்பர் மாதத்தில் 69.8 சத வீதமாகக் காணப்பட்ட பணவீக்கம் ஒக்ரோபர் மாதத்தில் 66 சதவீதமாகக் குறைவடைந்துள்ளது என்றும், நவம்பர் மாதத்தில் 61 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஒக்ரோபர் மாதத்தில் 85.6 சதவீதமாகக் காணப்பட்ட உணவுப் பணவீக்கம் நவம்பர் மாதத்தில் 73.7 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

உணவு அல்லாத பிரிவில் ஆண்டுக்கு ஆண்டு அளவிடப்படும் பணவீக்கம் கடந்த ஒக்ரோபர் மாதத்தில் 56.3 சதவீதமாகக் காணப்பட்டதுடன், நவம்பரில் 54.5 சத வீதமாகக் குறைந்துள்ளது. (எ-இ)

## நந்தலாலிடம் மன்னிப்புக் கோரும் மாரசிங்க

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நாடாளுமன்ற விவகார ஆலோசகர் பேராசிரியர் ஆஷு மாரசிங்க, மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்கவிடம் நிபந்தனையற்ற மன்னிப்புக் கோர விருப்பம் தெரிவித்துள்ளார். அரச தொலைக்காட்சியின் நிகழ்ச்சி ஒன்றில் கலாநிதி நந்தலால் வீரசிங்க பற்றி தாம் கூறிய கருத்து உண்மையற்றது என்றும் அதற்காக வருந்துகின்றேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கியின் ஆளுநர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடத் தயாராக உள்ளார் என்றும், அதற்கான பரப்புரைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் பேராசிரியர் ஆஷு மாரசிங்க அண்மையில் தெரிவித்திருந்தார். (எ-இ)

## இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் நிபந்தனையற்ற பேச்சு அர்த்தமற்ற செயற்பாடு

### விக்னேஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.2

ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ள தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு குறித்த பேச்சில் நிபந்தனை இன்றி பங்கேற்றால், அது கடந்த காலங் களைப் போன்று அர்த்தமற்றதாகவே இருக்கும் என தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும், முன்னாள் நீதியரசருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

சமஷ்டி அடிப்படையிலான தீர்வை நிபந்தனையாக முன்வைத்தே இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுக்கு செல்ல வேண்டும் என கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கோரிக்கை முன்வைப்பதற்கு முன்பதாகவே இது தொடர்பில் இரா.சம்பந்தனுக்குக் கடிதம் ஒன்றைத் தான் அனுப்பியுள்ளேன் என்றும் சி.வி.விக்னேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார்.



வரவு - செலவுத் திட்ட விவாதம் முடிவடைந்த பின்னர் இனப் பிரச்சினைத் தீர்வு தொடர்பில் சர்வகட்சி கூட்டம் நடத்தப்படும் என நாடாளுமன்றில் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்த நிலையில், தமிழ்த் தேசியக் கட்சிகள் சில நிபந்தனைகளை விதித்துள்ளன.

தேசிய இனப் பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சு ஆரம்பமாவற்கு முன்னரே நிபந்தனைகளை தமிழர் தரப்பு விதிக்கக் கூடாது எனவும், முதலில் பேச்சு மேசைக்கு வாருங்கள் எனவும் ரணில் விக்கிரமசிங்க தமிழ் அரசியல் தரப்புக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (எ-இ)

## அதிபர், ஆசிரியர்கள் இன்றி ஒட்டுசுட்டான் ஆரம்ப வித்தி.

### மாணவர்களைப் பாடசாலைக்கு அனுப்பாது பெற்றோர் எதிர்ப்பு

முல்லைத்தீவு, டிசெ. 2

முல்லைத்தீவு - துணுக்காய் கல்வி வலயத்துக்குட்பட்ட ஒட்டுசுட்டான் - முத்துவிநாயகர் தமிழ் ஆரம்ப வித்தியாலயத்தில் ஆசிரியர்கள் சமுகமளிக்காததால் மாணவர்களைப் பெற்றோர் வீட்டுக்கு அழைத்துச் சென்று எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது. இதுகுறித்து பெற்றோர் தெரிவித்ததாவது:-

சுமார் 100 மாணவர்கள்வரை கல்வி பயிலும் இந்த ஆரம்பப் பாடசாலையில் 6 ஆசிரியர்கள் கடமையில் ஈடுபடுகின்றனர்.

பாடசாலையில் கடமையாற்றிய அதிபர் கடந்த மே மாதம் விபத்தொன்றில் உயிரிழந்த நிலையில் பாடசாலைக்கு அதிபர் இதுவரை நியமிக்கப்படவில்லை. இந்த நிலையில் பாடசாலைக்கு நேற்று ஓர் ஆசிரியர் மாத்திரமே வருகை தந்துள்ளார். தரம் 5 வரையுள்ள இந்தப் பாடசாலையில் எவ்வாறு ஒரு ஆசிரியரால் அனைத்து மாணவர்களுக்கும் கற்பிக்க முடியும். அதிபர், ஆசிரியர்கள் அற்ற பாடசாலையில் மாணவர்கள் எவ்வாறு கற்றல் செயற்பாட்டை முன்னெடுப்பர்?

பாடசாலைக்கு அதிபரை நியமிக்கும் வரை நாம் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பப் போவதில்லை. இவ்வாறான நிலை தொடருமானால் அனைத்து மாணவர்களையும் வேறு பாடசாலைக்கு மாற்றும் நிலை ஏற்படும் - என்றனர். (ச-19)

## விசா கட்டணங்கள் நேற்று முதல் உயர்வு

கொழும்பு, டிசெ. 2

இரட்டைக் குடியுரிமைக்கான விண்ணப்பம் உள்ளிட்ட பல பிரிவுகளுக்கான விசா கட்டணங்கள் நேற்று வியாழக்கிழமை முதல் அதிகரிக்கப்பட்டுள்ளன என்று குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி இரட்டைக் குடியுரிமையை வழங்குவற்கான கட்டணம் 3 லட்சத்து 45 ஆயிரம் ரூபாவில் இருந்து 2 ஆயிரம் அமெரிக்க டொலர்களாகத் திருத்தப்பட்டுள்ளது.

அத்துடன் குடியுரிமைச் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் அத்தாட்சிப் பத்திரங்களின் பிரதிகளுக்கான கட்டணம் ஆயிரத்து 150 ரூபாவில் இருந்து 2 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இது தவிர, மேலும் சில பிரிவுகளுக்கான விசா கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன என்று குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஒ-14,இ)

## நீதிபதிகளுக்கு இடமாற்றங்கள்

கொழும்பு, டிசெ.2

வருடாந்த இடமாற்றத்தின் கீழ் நீதிபதிகள், நீதிவான்கள் மற்றும் 56 மேலதிக நீதிவான்களுக்கு இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன. அடுத்த வருடம் இரண்டாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன என்று நீதிச்சேவை ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

அதேவேளை, நீதிபதிகள் மற்றும் நீதிமன்ற அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட கார்களை பாதுகாப்பாக பயன்படுத்தி மீண்டும் அமைச்சுக்கு வழங்க வேண்டும் என்று நீதிச்சேவை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

புதிய சுற்றறிக்கையின் மூலம் அனைத்து நீதிபதிகள் மற்றும் நீதித்துறை அதிகாரிகளுக்கும் நீதிச்சேவை ஆணைக்குழு இந்த அறிவித்தலை விடுத்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உணவுப் பொருள்கள் விலை சதொசவில் மீண்டும் குறைப்பு

கொழும்பு, டிசெ. 2

நான்கு அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைகள் நேற்றுமுதல் நடைமுறைக்கு வரும் வகையில் குறைக்கப்பட்டுள்ளன என லங்கா சதொச நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதன்படி ஒரு கிலோ சிவப்புப் பச்சை அரிசி 6 ரூபாவால் குறைக்கப்பட்டு 199 ரூபாவாகவும் கீரிச் சம்பா கிலோ 15 ரூபாவால் குறைக்கப்பட்டு 225 ரூபாவாகவும் விற்கப்படவுள்ளது.

அத்துடன் ஒரு கிலோகிராம் பெரிய வெங்காயம் 30 ரூபாவால் குறைக்கப்பட்டு 225 ரூபாவாகவும் ஒரு கிலோ நெத்தலி 150 ரூபாவால் குறைக்கப்பட்டு ஆயிரத்து 150 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படும் என சதொச குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

# 'எய்ட்ஸ்' தொற்று அதிகரிப்புக்கு போதைப்பாவனையும் காரணம்

## விசேட மருத்துவ நிபுணர் தெரிவிப்பு

மன்னார், டிசெ. 2
அதிகரித்துவரும் போதைப்பொருள் பாவனையே மன்னார் மாவட்டத்தில் எச்.ஐ.வி. தொற்றாளர் அதிகரிப்புக்கு காரணமாக அமைகிறது. அதனைத் தடுக்கும்முகமாக பாலியல்நோய் மற்றும் எய்ட்ஸ் தடுப்புப் பிரிவினர் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என பாலியல் தொர்பான விசேட மருத்துவ நிபுணர் தக்ஷாயினி மகேந்திரநாதன் தெரிவித்தார்.

மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தர்மராஜா வினோதன் தலைமையில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார். இவர் மேலும் கருத்துரைத்ததாவது:-
உலக எய்ட்ஸ் தினம் இந்த வருடம் இந்தமாதம் முதலாம் திகதி தொடக்கம் 'சமத்துவத்தை உருவாக்குவோம்' என்னும் தொனிப்பொருளில் நாடளாவிய ரீதியில் கடைப்பிடிக்கப்படுகிறது.
இதுவரை நாட்டில் 4 ஆயிரத்து 686 எச்.ஐ.வி.நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதில் ஆண்கள் 3ஆயிரத்து 377 பேரும், பெண்கள் ஆயிரத்து 309 பேரும் அடங்குகின்றனர்.
வடக்கு மாகாணத்தில் இந்த வருடம் அடையாளம் காணப்பட்ட 137 எச்.ஐ.வி. தொற்றாளர்களில் 11 பேர் மன்னார் மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.
மன்னார் மாவட்டத்தில் அதிகரித்துவரும் போதைப் பொருள் பாவனையும் ஆண்களுக்கிடையேயான பாலியல் தொடர்புமே எச்.ஐ.வி. தொற்று அதிகரிக்கக் காரணமாகும்.
இதனைத் தடுக்கும் முகமாக பல்வேறுபட்ட மட்டங்களில் பாலியல்நோய் மற்றும் எயிட்ஸ் தடுப்புப் பிரிவினர், மக்களிடையே விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்த வேண்டும்.
அத்துடன் எய்ட்ஸ் நோயைத் தடுப்பதற்கான வழிமுறைகள், எய்ட்ஸ் நோயாளிகளை எவ்வாறு பராமரிக்கலாம், அவர்களுடைய தேவைப்பாடு எவ்வாறு உள்ளது. போன்றவற்றிலும் கூடிய கவனம் செலுத்தவேண்டும் - என்றார். (சு-213)

## லிட்ரோ எரிவாயு நேற்று விநியோகம்

கொழும்பு, டிசெ. 2
நாடு முழுவதும் ஒரு லட்சம் லிட்ரோ எரிவாயு சிலிண்டர்கள் நேற்று வியாழக்கிழமை விநியோகிக்கப்பட்டன என்று லிட்ரோ நிறுவனத் தலைவர் முதித்த பீரிஸ் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:-
முன்பதிவு செய்யப்பட்ட எரிவாயுக் கப்பல்கள் நாட்டுக்கு வருவதில் தாமதம் ஏற்பட்டதால், சந்தைக்கு எரிவாயுவை வெளியிடுவது மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.
இந்த நிலையில் தற்போது எரிவாயு கப்பல்கள் நாட்டை வந்தடைந்ததையடுத்து சந்தைகளுக்கு எரிவாயு சிலிண்டர்கள் விநியோகிக்கப்பட்டன. அவற்றுள் 12.5 கிலோகிராம் நிறை கொண்ட 80 ஆயிரம் சிலிண்டர்களும் விநியோகிக்கப்பட்டன - என்றார். (ஒ-14,இ)

## திருமறைக்கலாமன்ற ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம், டிசெ. 2
58 ஆவது ஆண்டில் கால்பதிக்கும் திருமறைக்கலாமன்றத்தின் நிகழ்வுகள், நாளை சனிக்கிழமை இடம்பெறவுள்ளன.
காலை 7 மணிக்கு யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மன்றத்தின் கலை ஞானசூரி தியான இல்லத்தில் நன்றி வழிபாடு இடம்பெறும். அதனைத் தொடர்ந்து முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாண மன்ற அலுவலகம் அருகில் அமைந்துள்ள கலைத்தூது மணி மண்டபத்தில் குருதிக்கொடை வழங்கும் நிகழ்வு இடம்பெறும். அதனைத் தொடர்ந்து மன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் கலை நிகழ்ச்சிகள் மாலை 4 மணிக்கு ஆரம்பமாகும்.
யாழ்.பல்கலைக்கழக இசைத்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி. சுகன்யா அரவிந்தன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வுகளுக்கு யாழ். மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் ம.பிரதீபன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (ஒ-14)

## வயோதிப் பெண்ணிடம் கத்தியைக் காட்டி கொள்ளை

### 15 வயதுச் சிறுவன் கைது

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியிலுள்ள ஆலயமொன்றுக்கு முன்பாக கச்சான் விற்பனையில் ஈடுபட்ட வயோதிபப் பெண்ணிடம் கத்தியைக் காட்டி கொள்ளையிட முயன்ற மூவரில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம், கல்வியங்காடு - சட்டநாதர் ஆலயம் முன்பாக இடம்பெற்றது.
கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் 15 வயதுடைய சிறுவன் எனவும் அவன் சிறுவர் சீர்திருத்தப் பள்ளியில் கல்வியைத் தொடர்கிறார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.
சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-
ஆலயம் முன்பாக கச்சான் விற்பனை செய்யும் வயோதிப பெண்ணிடம் கடந்த வெள்ளிக்கிழமை மதுபோதையில் வந்த மூவர் கத்தியைக் காட்டி பணத்தைக் கொள்ளையிட முற்பட்டனர்.
கோப்பாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்தனர். பொலிஸாரைக் கண்டதும் கொள்ளையர்கள் மூவரும் தப்பியோடிய வேளை அவர்களில் ஒருவரான 15 வயதான சிறுவனை பொலிஸார் மடக்கிப் பிடித்தனர். சந்தேகநபர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். தப்பியோடிய சந்தேகநபர்களைக் கைதுசெய்ய மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர். (சு-125,17)

## பிரதமரின் பாதுகாப்புப் பிரிவு உத்தியோகத்தரிடம் ஹெரோய்ன்

கொழும்பு, டிசெ.2
பிரதமர் பாதுகாப்புப் பிரிவின் பொலிஸ் உத்தியோகத்தர் ஹெரோயின் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார் என்று கண்டி தலைமை பொலிஸ் நிலையம் தெரிவித்துள்ளது.
சந்தேகநபர் இலங்கை - ஆப்கானிஸ்தான் நாடுகளுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டியில் கலந்துகொண்டுள்ள இலங்கை அணியின் வீரர்கள் தங்கியிருக்கும் விடுதியில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்.
இவர் ஹெரோயின் போதைப் பொருளுக்கு அடிமையானவராக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். கண்டி தலைமை பொலிஸ் நிலையத்தின் மோசடி தடுப்பு பிரிவினர் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-இ)

## வலி.வடக்கு பிரதேசசபையின் நடமாடும் சேவைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ. 2
வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் தெல்லிப்பழை உப அலுவலகப் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வட்டார ரீதியாக சோலை வரி அறவீடு, ஆதனப் பெயர் மாற்றம், சைக்கிள் தகடு, நாய் உரிமம் வழங்கல் மற்றும் சபை சார் விடயங்கள் நடமாடும் சேவைகளாக நடைபெறவுள்ளன.
அதற்கமைய முதலாம் வட்டாரப் பிரிவுக்கு இன்று வெள்ளிக்கிழமை பாரதி சனசமூக நிலையத்திலும் 13 ஆம் வட்டாரப் பிரிவுக்கு எதிர்வரும் 6 ஆம் திகதி ஜே/222 கிராம அலுவலர் அலுவலகத்திலும் 8 ஆம் திகதி ஜே/230 கிராம அலுவலர் அலுவலகத்திலும் 9 ஆம் வட்டாரப் பிரிவுக்கு எதிர்வரும் 10 ஆம் திகதி ஜே/231 கிராம அலுவலர் அலுவலகத்திலும் 10 ஆம் வட்டாரப் பிரிவுக்கு 13 ஆம் திகதி ஜே/225 கிராம அலுவலர் அலுவலகத்திலும் 11 ஆம் வட்டாரப் பிரிவுக்கு 20 ஆம் திகதி முருகானந்தா சனசமூக நிலையத்திலும் நடமாடும் சேவைகள் இடம்பெறவுள்ளன.
எனவே நடமாடும் சேவையில் பொதுமக்கள் கலந்துகொண்டு சேவைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு வலி.வடக்கு பிரதேசசபைத் தவிசாளர் சோ.சுகிர்தன் அழைப்பு விடுத்துள்ளார். (ஒ-14)

# கடலட்டைப் பண்ணைகளை அகற்றக் கோரி போராட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 2
அனலைதீவு - பருத்தித்தீவுப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள கடலட்டைப் பண்ணைகளை உடனடியாக அகற்றுமாறு கோரி கடற்றொழிலாளர்கள் பணிப்புறக்கணிப்பில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை ஈடுபட்டனர்.
கடற்றொழிலுக்குப் பாதிப்பு ஏற்படும் வகையில் கடலட்டைப் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன. இதனால் தமது தொழில் பாதிக்கப்பட்டு வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியாத நிலை உள்ளது என்று போராட்டத்தில் ஈடுபட்ட



கடற்றொழிலாளர்கள் தெரிவித்தனர்.
அத்துடன் பருத்தித்தீவுப் பகுதியில் புதிதாக கடலட்டைப் பண்ணைகள் அமைக்கப்படுகின்றன எனவும் குற்றஞ் சாட்டினர். இவ்வாறு அமைக்கப்பட்ட, அமைக்கப்படுகின்ற கடலட்டைப் பண்ணைகளை அகற்றும் வரை தமது போராட்டம் தொடரும் என்றும் கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஒ-14,23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வலி.மேற்கின் 3 வீதிகளையும் சீரமைக்குமாறு போராட்டம்

## மக்களால் போக்குவரத்து முடக்கம்

யாழ்ப்பாணம், டிசெ. 2

உயிர்களைக் காவுகொள்ளும் நிலையில் காணப்படும் வலி.மேற்கிலுள்ள 3 பிரதான வீதிகளையும் உடன் புனரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி வலிகாமம் மேற்கு பிரதேச மக்கள் கடந்த செவ் வாய்க்கிழமை காலை மூளாய் பிரதான வீதியை முடக்கி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்ததாவது:-

வலிகாமம் மேற்குப் பிரதேசசபைக்குட்டட்ட பொன்னாலை - வட்டுக்கோட்டை வீதி, மாவடி- மூளாய் வீதி, காரைநகர்- மானிப்பாய் வீதி ஆகிய மூன்று வீதிகளும் மிக மோசமாக சேதமடைந்து காணப்படுகின்றன. நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலை காரணமாக குறித்த வீதிகளின் புனரமைப்புப் பணிகள் கைவிடப்பட்டுள்ளன.

அரைகுறையான திருத்தப் பணிகளால் பயணிகள் வீதி விபத்துக்களுக்கு உள்ளாவதுடன் பெரும் சிரமங்களுக்கு மத்தியிலேயே பயணிக்க வேண்டியுள்ளது. ஏனைய பகுதிகளில் காப்பெற் வீதி அமைத்துக் கொடுக்கப்படுகிறது. இந்த அவலநிலை குறித்து பலதடவைகள் சுட்டிக்காட் டப்பட்ட போதும் அதிகாரிகள் அசமந்தமாகவே செயற்படுகின்றனர்.

மோசமாக சேதமடைந்துள்ள இந்த வீதியூடாகப் பயணிக்கும் அவலநிலை குறித்து ஏசி அறையில் இருக்கும் அதிகாரிகள் வெளியே வந்து பார்க்க வேண்டும்- என்றனர். போராட்டத்தின் போது "வலி மேற்கில் வசிப்பவர்கள் மக்களா மாக்களா!" "நகரத்திலும் கிராமத்திலும் வீதிகளில் வேற்றுமையா?", "782, 784, 786 வீதிகளால் பயணிக்கும் மக்கள் வலிகளுடன் செல்வதா" "வீதி அபிவிருத்தி அதிகாரசபை தூக்கத்தில் உள்ளதா?" போன்ற பதாகைகளை ஏந்தியவாறு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். அத்துடன் சங்கானைப் பிரதேச செயலகம் சென்று பிரதேச செயலரிடம் மனுவொன்றையும் கையளித்தனர். போராட்டத்தின்போது வலி. மேற்குப் பிரதேசசபையின் உபதவிசாளர் சச்சிதானந்தன், வலிகாமம் மேற்குப் பிரதேசசபை யின் உறுப்பினர்கள், சமூகமட்ட அமைப்பின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் பங்கேற்றனர். (ச-125)


# முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

நினைவு தினம் : 27.11.2022 பூசை : 02.12.2022

அன்னை மடியில் 21 - 06 - 1946

இறைவன் அடியில் 27 - 11 - 2021



அமரர்

மகேஸ்வரன் சரோஜினிதேவி

(ஓய்வுபெற்ற அரச அலுவலர்)

கண்ணுக்கு நிலவாய் நெஞ்சத்தில் அன்பாய்
மண்ணில் என்றும் எங்களோடு
கண்கண்ட தெய்வமாய் வாழ்ந்து
விண்ணுக்கு வாழச்சென்று வருடமாயிற்றோ!

கனவோடை
களபூமி, காரைநகர். குடும்பத்தினர்

(cs 47901) (2.6)



# ஓராண்டு நினைவஞ்சலி

அமரர் திருமதி கீர்த்திகா நரேஸ்ராஜ்

திதி: வளர்பிறை நவமி



தாய் மடியில் 16.11.1988

சிவனடியில் 12.12.2021

எம் குடும்பத்தின் ஒளி விளக்காய் ஒளிர்ந்தவளே
ஆண்டு ஒன்று சென்றாலும்
ஆறவில்லை எங்களின் துயரம் இன்னும்
ஆறாத துயரை நாங்கள் அனுபவிக்க
நீங்கள் மீளாத்துயில் கொண்டீர்களோ !!!

விடியும் பொழுதெல்லாம் உங்கள் நினைவே
எங்கள் மனதெல்லாம்
உங்கள் ஞாபகத்தில் தினம் தினம்
வெதும்பி அழுகின்றோம்
வேதனையில் தவிக்கின்றோம்.

உங்கள் அன்பு முகம் காணாது
நானும் எம் இரு பிஞ்சு இரண்டும்
நித்தம் ஏங்கித் தவிப்பதனை
நான் எங்கு போய் சொல்லி அழ.....

நினைவில் எம்முடனும் நிஜயத்தில்
இறைவனிடமும் கலந்திட்ட உங்கள் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

கணவர், பிள்ளைகள், குடும்பத்தினர்.

இல. 179 / 285, சிவன் கோயில் வீதி,
திருநாவற்குளம், வவுனியா.

(cs 1058) (2.6)


# Tantalize 2022:

## இலங்கையின் பல்கலைக்கழக திறமைக்கான தேடல்

கொழும்பில் உள்ள ஆசிய பசுபிக் இன்ஸ்ரிடியூட் ஆஃப் இன்ஃபர்மேஷன் டெக்னோலஜி (APIIT) நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட, இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்களுக்கிடையேயான மிகப்பெரிய திறமை தேடல்களில் ஒன்றாக டான்டலைஸ் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட உணர்வாக மாறியுள்ளது.

இலுமினேட், பிளேஸ் மற்றும் இலங்கையின் பொழுதுபோக்கு துறையில் குறிப்பிடத்தக்க கலைஞர்கள் போன்ற அற்புதமான இளம் திறமைகளை உருவாக்கும் ஒரு தளமாக இது பல ஆண்டுகளாக அங்கீகரிக்கப்பட்டது. கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக 2 வருட இடைவெளிக்குப் பிறகு, டான்டலைஸ் மீண்டும், 12ஆவது ஆண்டில் மிகவும் சிறப்பான முறையில் நடத்தப்படும்.

இறுதிச் சுற்றுக்கு அனுப்பப்படும் சிறந்த திறமையாளர்களைத் தேடுவதற்கான ஆடிஷன் சுற்றுகள் ஒக்ரோபர் 8, 15 ஆம் திகதிகளில் நிறைவடைந்தன. பல்வேறு பிரிவுகளின் இறுதிப் போட்டியாளர்களுக்கான பொழுதுபோக்குத் துறையின் மரியாதைக்குரிய கலைஞர்களிடமிருந்து நிபுணர் பயிற்சி 05 நவம்பர் 2022 அன்று ஒரு பட்டறை மூலம் நிறைவேற்றப் பட்டது.

2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24 ஆம் திகதி நெலும் பொகுண மஹிந்த ராஜபக்ச திரையரங்கில் மாலை 6.30 மணி முதல் இலங்கையின் 8 புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களின் பாட்டு, நடனம், இசைக்குழுக்கள் மற்றும் வாத்தியக் கருவிகள் என நான்கு பிரிவுகளில் 14 இறுதிப் போட்டியாளர்களுடன் இறுதிப் போட்டி நடைபெறவுள்ளது.

1200 க்கும் அதிகமான பார்வையாளர்களை ஈர்க்கும் இலங்கையின் டாடி, நியூஸ், வஸ்தி மற்றும் தலைசிறந்த கலைஞர்களின் முன்னிலையில் நடத்தப்படும். இலங்கை முழுவதிலுமுள்ள அனைத்து குழந்தைகளுக்கும் சரியான நேரத்தில், சரியான முறையில் மற்றும் சிறந்த கவனிப்பை வழங்குவதற்காக லேடி ரிட்ஜ்வே மருத்துவமனையின் இருதய மற்றும் ஆபத்தான சிகிச்சையின் கட்டுமானத்தை விரைவுபடுத்துவதற்காக, நிகழ்வின் அனைத்து நடவடிக்கைகளும் லிட்டில் ஹார்ட்ஸ் அறக்கட்டளைக்கு நன்கொடையாக வழங்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாண் ஏற முழம் சறுக்குதல்


இலங்கையில் இனப்பிரச்சினை தீர்வுக்கான முயற்சிகள் சாண் ஏற முழம் சறுக்குவதைப்போன்றுள்ளன. அடுத்த ஆண்டு சுதந்திர தினத்துக்குள்– இன்னமும் 64 நாள்களுக்குள்– இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பேன் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியிருந்தார். அது தொடர்பில் எதிர்வரும் 11ஆம் திகதி சர்வகட்சி கூட்டத்துக்கும் அழைப்பு விடுத்திருந்தார். அவரது இந்த அறிவிப்பு வெளியானதும் சிங்களத் தரப்பிலிருந்து பல்வேறு எறிகணைத் தாக்குதல்கள் ஆரம்பிக்கப்பட்டன. 'படையினரின் தியாகம் ஒற்றையாட்சியைப் பாதுகாப்பதற்குத்தான்', 'மாவட்ட அபிவிருத்திச் சபையே தீர்வு', 'சமஷ்டி அதிகாரம் வழங்கினால் நாடு 9 துண்டுகளாகப் பிளவுபடும்' என்றெல்லாம் அவர்கள் பல்முனையில் மோதல்களை தொடக்கியுள்ளனர். இவை எல்லாவற்றுக்கும் மேலாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்ககூட, தமிழர் தரப்பு பேச்சுக்கு முன்னர் நிபந்தனைகள் எதனையும் விதிக்கக்கூடாது என்று குறிப்பிடு கின்றார். கடந்த காலத்தில் சந்தர்ப்பங்களை தவறவிட்டமைபோன்று செயற்படவேண்டாம் எனவும் சொல்கின்றார்.

இலங்கையில் கொழுந்துவிட்டெரிந்து இன்னமும் அணையாமல் புகைந்துகொண்டிருக்கும் இனப்பிரச்சினைக்கான தீர்வு புதிய அரசமைப்பின் ஊடாகவோ, பேச்சு ஊடாகவோ சாத்தியப்படும் என்பதை நம்பமுடியாது. கடந்த கால அனுபவங்கள் அதைத் தெளிவாகவே எடுத்துக்காட்டுகின்றன. தமிழ்த் தலைவர்களுக்கும் சிங்கள ஆட்சியாளர்களுக்குமான ஒப்பந்தங்கள் ஒருதலைபட்சமாக சிங்களத் தலைவர்களால் மீறப்பட்டிருந்தன. மூன்றாம் தரப்பொன்றின் தலையீட்டுடன் தமிழ் மக்களின் தீர்வாக நாட்டுக்கு முன்வைக்கப்பட்ட '13' ஆவது திருத்தச் சட்டம்கூட சிங்கள தலைவர்களால் தன்னிச்சையாக மீறப்பட்டன. அதிகாரப் பரவலாக்கம்கூட, ஜனாதிபதியின் பிரதிநிதி என்ற அடிப்படையில் ஆளுநரால் கட்டுப்படுத்தப்பட்டன. தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்தில் உச்சப்பட்ச அதிகாரப் பகிர்வுக்கு இணங்கிய சிங்களத் தலைவர்கள், அவர்கள் இல்லாத காலத்தில் அதிகாரப் பரவலாக்கத்துக்கு கூட தயாரில்லாத நிலையிலேயே இருக்கின்றனர். சிங்களத் தலைவர்கள் மட்டுமல்லாது சிங்கள மக்களின் மனோநிலையும் இதுதான்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நீடித்த நிலையான தீர்வு என்பது சிங்களத் தலைவர்களினதும், சிங்கள மக்களதும் மனநிலை மாற்றத்தின் ஊடாகவே சாத்தியப்படும். இப்போதுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் பூகோள அரசியல் சூழலால் தமிழ் மக்களுக்கு வழங்கப்படும் தீர்வு, பிறிதொரு காலத்தில் ஆட்சிக்கு வரும் சிங்களத் தலைவர்களால் மீளப்பெற முடியாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. இந்திய –இலங்கை ஒப்பந்தத்தின் ஊடாக உருவாக்கப்பட்ட மாகாணசபை முறைமையிலிருந்து சில விடயதானங்களை மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சி அமைத்த மஹிந்த ராஜபக்ச உருவியெடுத்திருந்தார். எனவே வழங்கப்பட்ட அதிகாரங்களை மீளப்பெறமுடி யாது என்ற சமஷ்டி அடிப்படைக் கோட்பாட்டின் அடிப்படையில் அதிகாரங்களைப் பகிர்ந்தாலும், சிங்களத் தலைவர்கள் பிறிதொரு சந்தர்ப்பத்தில் அதனை மீற மாட்டார்கள் என்பதற்கோ அல்லது அதிகாரங்களைச் செயற்படுத்தும் நிறுவனங்கள் ஊடாக இடையூறுகளை விளை விக்க மாட்டார்கள் என்பதற்கோ எந்தவொரு உத்தரவாதமும் இல்லை. சிங்கள மக்களின் மனோநிலை மாறாதவரையில் அவர் களின் தலைவர்களின் எண்ணங்களிலும் மாற்றம் ஏற்படாது. அதுவரையில் அவர்களுடன் இணைந்து வாழும் ஒரு தீர்வும் தமிழர்களின் இனப்பிரச்சினைக்கு தீர்வாக அமையாது.

நாளொரு நல்வார்த்தை

" நான் இன்னும் வாசிக்காத நல்ல புத்தகம் ஒன்றை வாங்கி வந்து என்னைச் சந்திப்பவனே என் தலை சிறந்த நண்பன்"
- ஆபிரகாம் லிங்கன்




# தமிழர்களுக்கு கொடுத்த வாக்கை நிறைவேற்ற வலியுறுத்திய 'றோ'

கொழும்பு, டிசெ.2

இலங்கை தமிழ் சிறுபான்மையினருக்கான சமஷ்டி தீர்வு உட்பட 1987 ஆம் ஆண்டு முதல் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றவேண்டும் என்று இந்தியாவின் றோ அமைப்பின் தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை கேட்டுக்கொண்டார் என ஜனாதிபதிக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சில நாள்களுக்கு முன்னர் இலங்கை வந்திருந்த இந்திய உளவு அமைப்பான 'றோ' அமைப்பின் தலைவர் சமந்குமார் கோல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உட்படப் பல தரப்பினருடன் சந்திப்புக்களை நடத்தியிருந்தார் என்று தகவல் வெளியாகியிருந்தது.

சீனாவுக்கும், அமெரிக்கா, ஜப்பான், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளை உள்ளடக்கிய இந்தியா தலைமையிலான சகாக்களுக்கும் இடையே உருவாகிவரும் பூகோள அரசியல் பனிப்போரின் நடுவில் இலங்கை சிக்குண்டுள்ளது.

இந்தியப் பிரதமரை சந்திப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த மாதம் மேற்கொண்ட மறைமுக முயற்சிகளின் மத்தியிலேயே இந்தியாவின் 'றோ' தலைவரின் பயணம் இடம்பெற்றுள்ளது என தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

'றோ' தலைவர் சில வர்த்தக பரிமாற்றங்கள் உட்பட எஞ்சியுள்ள சில விடயங்கள் தொடர்பாக ஜனாதிபதியுடன் பேச்சு மேற்கொண்டார். இலங்கையின் வடக்கு - கிழக்கில் சீனாவின் அதிகரித்து வரும் நடவடிக்கைகள் தொடர்பாக அவர் கரிசனை வெளியிட்டார் என இந்தச் சந்திப்பு குறித்து விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. அரசமைப்பின் 13ஆவது திருத்தம் உட்பட இலங்கை அளித்த வாக்குறுதிகள் தொடர்பாகவும் அவர் கேள்வி எழுப்பினார் என மற்றுமொரு அரசாங்க தரப்பு தெரிவித்துள்ளது.

தமிழ்மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வை காண்பதற்கான பேச்சில் ஈடுபடத் தயார் என ஜனாதிபதி கடந்த வாரம் தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதிக்கும் 'றோ' தலைவருக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்புக்கள் தொடர்பாகக் கருத்துக் கேட்டவேளை ஜனாதிபதி செய லகம் அது தொடர்பாகப் பதிலளிக்கவில்லை.

'றோ' தலைவரின் இலங்கைப் பயணத்துக்கான ஏற்பாடுகளைத் தாம் செய்யவில்லை என இலங்கையின் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. அவ்வாறான ஒரு பயணம் தொடர்பில் தான் எதனையும் அறிந்திருக்கவில்லை என அமைச்சரவை பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இந்தியப் புலனாய்வு பிரிவின் தலைவரோ அல்லது வேறு எவரோ ஜனாதிபதியை சந்தித்தமை எனக்கு எதுவும் தெரியாது என அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்த்தன செவ்வாய்க்கிழமை வாராந்த பத்திரிகையாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

அவ்வாறான சந்திபொன்று இடம்பெற்றிருந்தால் ஜனாதிபதி அது தொடர்பாக நாடாளுமன்றத்துக்கு அறிவிப்பார் என தெரிவித்த அவர் எதையும் மறைக்காமல் அவர் நாட்டுக்குத் தெரிவிப்பார் எனக் கருதுகின்றோம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, றோவின் தலைவர் முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்சவையும் சந்தித்தார் என அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இந்தச் சந்திப்பின்போது அடுத்த தேர்தல் தொடர்பான செய்தி தெரிவிக்கப்பட்டிருக்கலாம் என பஸில் ராஜபக்சவுக்கு நெருக்கமான வட்டாரமொன்று தெரிவித்துள்ளது. 'றோ' தலைவரின் பயணம் தொடர்பாக இந்தியத் தூதரகத்திடம் கருத்து பெறுவதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் வெற்றிபெறவில்லை. (எ-இ)

நாளை 03.12.2022 சனிக்கிழமை கார்த்திகை 17

சுபநேரம் : 03.15 - 04.45
ராகுகாலம்: 09.15 - 10.45

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய மட்டத்துக்கு செல்வோரை அக்கறையுடன் கவனியுங்கள்

## சென். சேவியர் ஆண்கள் பாடசாலையின் அதிபர் வலியுறுத்து

மன்னார், டிசெ. 2

வடக்கு மாகாணத்திலிருந்து தேசியமட்டப் போட்டிகளுக்குச் செல்லும் மாணவர்களின் நலனில் கூடுதல் அக்கறையுடன் நாம் செயற்பட வேண்டும் – இவ்வாறு வலியுறுத்தினார் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி அதிபர் அருட்சகோதரர் எஸ்.ஈ.றெஜினோல்ட்.

மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியில் கல்வியிலும் விளையாட்டிலும் சிறந்து விளங்கிய மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அண்மையில் தேசிய மட்டத்தில் விளையாடிய கால்பந்தாட்ட வீரர்களுக்கு இந்தத் தொடர் பெரும் வேதனை நிறைந்தாக காணப்பட்டது. பல இடர்பாடுகளுக்கு மத்தியிலேயே இந்த வீரர்கள் சோர்வடையாது விளையாடி வெற்றிகளைப் பெற்றுள்ளனர்.

வீரர்களுக்கு வசதிவாய்ப்புக்கள் போதியளவு ஏற்படுத்தப்படவில்லை.

இது தொடர்பில் நாம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்தியுள்ளோம். மன்னார் சென். சேவியர் ஆண்கள் பாடசாலைக்கு மட்டுமல்ல வடமாகாணத்தில் இருந்து எந்தவொரு பாடசாலையைப் பிரதிநிதித்துவம் செய்தும் தேசியத்துக்குச் செல்லும் வீரர்கள், வீராங்கனைகள் உரியமுறையில் கவனிக்கப்பட வேண்டும் - என்றார். (ம-60-213)

## மொழிபெயர்ப்பாளராக சத்தியப்பிரமாணம்



யாழ்ப்பாணம், டிசெ. 2

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தில் பணிபுரியும் எந்திரி ஆனந்த நடராஜா அபிராஜ் யாழ்ப்பாணம் நீதிமன்றில் மாவட்ட நீதிவான் எஸ். சதீஸ்வரன் முன்னிலையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மொழிபெயர்ப்பாளராக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டுள்ளார். (ச)

## ஆண்டு நிறைவையொட்டி நாட்டியப் போட்டிகள்

கிளிநொச்சி, டிசெ. 2

கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கத்தின் 30 ஆம் ஆண்டு நிறைவையொட்டி மாவட்ட மட்ட நாட்டியப் போட்டிகள் முன்னாள் மாவட்டச்செயலர் கந்தையா பொன்னம்பலம் அவைக்கூடத்தில் அண்மையில் நடைபெற்றன.

கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய நான்கு கோட்டப் பாடசாலைகளின் மாணவர்கள் ஆரம்பப் பிரிவுப் போட்டிகளில் பங்குபற்றினர். அதனைத்தொடர்ந்து திறந்த பிரிவுக்கான போட்டிகளும் நடத்தப்பட்டன.

வன்னிமயில் நாட்டியக் கலைக்கூட இயக்குநர் க.கருணானந்தன் நாட்டியப் போட்டிகளை நெறிப்படுத்தினார்.

நடைபெற்று முடிந்த போட்டிகளின் இறுதிப் போட்டிகள் விரைவில் நடத்தப்படவுள்ளன. அத்துடன் கலைத்திறன், கலைப் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான பரிசில்கள் நடைபெறவுள்ள 30 ஆவது ஆண்டு விழாவில் வழங்கப்படும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஒ-14)

## நாவாந்துறைப் பிரதேசத்தில் டெங்கு ஒழிப்பு முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 2

நாவாந்துறை பிரதேசத்தில் ஜே/84, ஜே/85 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் கடந்தவாரம் முன்னெடுக்கப்பட்டன. இதன்போது 121 குடியிருப்புக்கள் நுளம்பு பெருகக் கூடிய இடங்களாக இனங்காணப்பட்டன.

இதில் 22 குடியிருப்புகளை உடனடியாகத் துப்புரவு செய்யக்கோரி சிவப்பு அறிவித்தல்களும் வழங்கப்பட்டன. அத்துடன் 12 குடியிருப்புகளில் நுளம்புக் குடம்பிகளும் இனங்காணப்பட்டதுடன் அவை உடனடியாக அழிக்கப்பட்டுக் குடியிருப்புகளும் துப்புரவு செய்யப்பட்டன. (ஒ-14-17)

## கடலுணவுகளின் விலை மீண்டும் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.2

யாழ். நகரை அண்டிய மீன் சந்தைகளில் கடலுணவுகளின் விலை திடீரென அதிகரித்துள்ளது.

கடந்த வாரத்தில் கடலுணவுகளின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டபோதும் தற்போது அவற்றின் விலை திடீரென அதிகரித்துள்ளது.

நிலவும் சீரற்ற காலநிலையால் ஆழ்கடல் மீன்பிடி பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் வடமராட்சி, தீவுப்பகுதிகளில் இருந்து கடலுணவுகளின் வருகை மிகக் குறைந்து காணப்படுகின்றது. இதனாலேயே கடலுணவுகளின் விலை அதிகரித்துக் காணப்படுகின்றது. அதன் படி சந்தைகளில் கடலுணவுகள் கிலோ ஆயிரம் ரூபாவுக்கு மேல் விற்கப்படு கின்றன. (ஒ-14-17)

## வீட்டில் பதுக்கி வைத்த கசிப்புடன் பெண் கைது!

யாழ்ப்பாணம், டிசெ. 2

தெல்லிப்பழைப் பகுதியிலுள்ள வீடொன்றில் பதுக்கி வைக்கப்பட்ட கசிப்புடன் பெண்ணொருவர்கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டார் என்று தெல்லிப்பழைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தெல்லிப்பழை கிழக்கைச்சேர்ந்த பெண்ணொருவர் தனது வீட்டில் கசிப்பை நிலத்தில் பதுக்கி வைத்துள்ளார் என்று பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்தக் கைது இடம்பெற்றது.

இதன்போது 150 லீற்றர் கோடாவும் 10 லீற்றர் கசிப்பும் பொலிஸாரால் மீட்கப்பட்டது. அத்துடன் கசிப்புக் காய்ச்சுவதற்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்களும் பொலிஸாரால் மீட்கப்பட்டன.

மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் குறித்த பெண் முற்படுத்தப்படுவார் என்று தெல்லிப்பழைப் பொலிஸார் தெரிவித்தனர். (ஒ-14-26)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மயான அபிவிருத்தி கலந்துரையாடல்

சாவகச்சேரி, டிசெ. 2

மீசாலை வேம்பிராய் மயானத்தின் அபிவிருத்திப் பணி தொடர்பில் சாவகச்சேரி பிரதேசசபைத் தவிசாளருக்கும் மீசாலை வடக்கு சுடர் ஒளி சனசமூக நிலைய நிர்வாகத்தினர் மற்றும் பிரதேச மக்களுக்கிடையே கலந்துரையாடல் ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.


சாவகச்சேரி பிரதேச சபையின் 2 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் மயானத்தின் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ள நிலையில் கலந்துரையாடல் இடம்பெற்றது. (ஒ-14-159)



## திறன்வகுப்பறை திறப்பு விழா

சாவகச்சேரி, டிசெ. 2

கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலையில் திறன் வகுப்பறைத் திறப்பு விழா கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இதன்போது ஆங்கில செயற்பாட்டு வகுப்பறையும் ஆரம்பிக்கப்பட்டது. பாடசாலை அதிபர் சியாமளா கணராஜன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், முதன்மை விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.வரதீஸ்வரன் கலந்துகொண்டார். (ஒ-14-159-131)



## கிளிநொச்சி விநாயகபுரத்தில் எள்சார் உற்பத்தி நிலையம்

கிளிநொச்சி, டிசெ. 2


கரைச்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட விநாயகபுரம் கிராமத்தில் ஐ.ஓ.எம் நிறுவனத்தின் நிதி அனுசரணையில் அமைக்கப்பட்ட எள்சார் உற்பத்தி நிலையம், கிளிநொச்சி மாவட்டச் செயலர் றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை திறந்து வைக்கப்பட்டது. (ஒ-14-113)

# கொடுங்கோன்மைக்கு எதிராகப் போராடி உயர்நீத்த மாவீரர்களை மறக்கமாட்டோம்

## மனோ கணேசன் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 2

கொடுங்கோன்மைக்கு எதி ராகப் போராடி உயர்நீத்த மாவீரர்களை மறக்க மாட்டோம் என்று தமிழ் முற்போக்குக் கூ ட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினரு மான மனோ கணேசன் வெளிப்படையாகத் தெரிவித்துள்ளார்.



மாவீரர் நாளான கடந்த ஞாயிற்றுக் கிழமை கிளிநொச்சி கனகபுரம் துயி லும் இல்லத்தில் மாவீரர்களை நினை வுகூருவதற்காக அலைகடலெனத் திரண்டிருந்த மக்கள் கூட்டத்தின் படத்தை தனது முகநூலில் இணைத்து பதிவிட்டுள்ள பதிவொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்தப் பதிவில் மேலும் உள்ளதா வது:-

இது 2022 நவம்பர் செய்தி படம். பல பக்க செய்திகளை இந்த ஒரே படம் சொல்கின்றது. கொடுங்கோன் மைக்கு எதிராகப் போராடி மாண்ட மாண்புகளை மறக்க மாட்டோம் என்பது தான் இதன் பிரதான செய்தி. அரசியல் பிரமுகர்களை முன்னிலைப்படுத்தா மல், கட்சி அரசியலுக்கு அப்பால் நின்று இந்தச் செய்தி தெற்குக்குக் கூறப்படுகின்றது. இம்முறை நினை வேந்தல் நிகழ்வுகளைப் பெரும் கெடுபிடி இல்லாமல் நடக்க விட்டுள் ளார் ரணில்.

எனினும் கொடுங்கோன்மையை மறக்க மாட்டோம், ஆனால் மன் னிப்போமா என மக்கள்தான் கூற வேண்டும். ரணில், இதை இந்த மக் களிடம் நேரடியாகக் கேட்டு தெரிந்து கொள்வதற்கான பொறிமுறையை ஏற்படுத்த வேண்டும். அதன் பின்னர் தான் உண்மையான நல்லிணக்க செயன்முறை ஆரம்பமாக முடியும். ஜனாதிபதி ரணிலிடம் இதை நேரடி யாகக் கூற விரும்புகின்றேன் - என் றுள்ளது. (எ-14,22)

# உணவுத் திட்டத்தின் கீழ் கொடுப்பனவு வழங்கல்

உலக உணவுத் திட்டத்தின் கீழ் தென்மராட் சிப் பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட 9 ஆயிரத்து 17 குடும்பங்களில் சமுர்த்திப் பயனாளிகள் குடும்பங்கள் தவிர்ந்த 6 ஆயிரத்து 165 குடும்பங்களுக்கு தலா 15 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டுள்ளன.

பிரதேசத்தில் உள்ள 60 கிராம அலுவலர் பிரிவுகளிலிருந்து பொருண்மியம் நலிவ டைந்த குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களது பெயருக்கு புலம்பெயர் நாடுக ளிலிருந்து அனுப்பப்பட்ட உதவித் தொகை கையளிக்கப்பட்டது.

இந்த உதவித் தொகை 3 ஆயிரத்து 661 பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், நோய்களால் பாதிக்கப்பட்ட 113 பேர், ஆயி ரத்து 435 கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார், மற்றும் 943 விசேட தேவையு டையோர் ஆகியோருக்கு வழங்கப்பட்டன.

இதேவேளை தெரிவு செய்யப்பட்ட 2 ஆயி ரத்து 852 சமுர்த்திப் பயனாளிகள் குடும்பங் களுக்கான கொடுப்பனவு அந்தந்த சமுர்த்தி வங்கிகள் மூலம் வழங்கப்படவுள்ளன. அத் துடன் கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார் மற்றும் பெண் தலைமைத்துவக் குடும்பங்க ளுக்கு இரண்டாம் கட்டமாக தலா 5 ஆயிரம் ரூபா வீதமும் வழங்கப்படவுள்ளன. (ஒ-14-9)

# போஷாக்கற்ற குழந்தைகளுக்கு வளர்ப்புப் பெற்றோர் முறைமை

*சுகாதார அமைச்சர் கூறுகின்றார்*

கொழும்பு, டிசெ.2

போஷாக்கு குறைபாடுள்ள சுமார் 40 ஆயி ரம் குழந்தைகளின் போஷாக்கு தேவையை பெற் றோர்களால் பூர்த்தி செய்ய முடியாத நிலை யில், அந்தக் குழந்தைகளுக்கான வளர்ப்புப் பெற்றோர் முறைமை உடனடி யாக ஆரம்பிக் கப்படவுள்ளது என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இதுவரை 21 ஆயிரம் போஷாக்குக் குறைபா டுள்ள சிறுவர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். என்றும், எதிர்காலத்தில் அந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் எனவும் சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார். ஊட்டச்சத்து குறைபாடுள்ள 40 ஆயிரம் குழந்தைகளை இலக்காகக் கொண்டு இந்தவளர்ப்புப் பெற் றோர் தேடல் திட்டத்தை செயற்படுத்த முயற் சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இது தொடர்பான திட்டத்துக்காக அரசாங் கம் 500 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது. இந்திய நிறுவனம் ஒன்றும் இலங்கையி லுள்ள தனியார் நிறுவனம் ஒன்றும் இதற்காக ஒரு பில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-இ)

# ஆயுள்வேத மருத்துவத்துறையை அரச, தனியாருடன் இணைக்குக

கொழும்பு, டிசெ. 2

அரச மற்றும் தனியார் மருத்துவமனைகளுடன் ஆயுள்வேதத்தை இணைக்க தேசியபேரவை உபகுழு வால் யோசனை முன் வைக்கப்பட்டுள்ளது.

குறுகிய, நடுத்தர மற்றும் நீண்டகால கொள்கைத் தயாரிப்புக்கான முன்னுரி மைகளை அடையாளம் காண்பதற்காக உருவாக் கப்பட்ட தேசியபேரவையின் உப குழு, அதன் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தலைமை யில் அண்மையில் நாடா ளுமன்றில் கூடியது.

இதன்போது ஆயுள்வேத மருத்துவத் துறையின் நிலைபேறான தன்மை மற் றும் அதன் அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு அதனை அரச மற்றும் தனி யார் மருத்துவமனைகளு டன் இணைப்பது தொடர் பில் ஆலோசிக்கப்பட்டது.

இதற்கென குறுகிய, நடுத் தர மற்றும் நீண்டகால கொள்கைத் தயாரிப்புக் கான முன்னுரிமைகளை அடையாளம் காண்பதற்குக் கவனம் செலுத்தப்பட்டது.

தேசிய கொள்கைகளைத் தயாரிப்பதற்கான முன் மொழிவுகள் மற்றும் தற் போதைய தடைகள் குறித் தும் இதன்போது கலந்து ரையாடப்பட்டது.

கூட்டத்தில் சுகாதார அமைச்சு மற்றும் அதனு டன் சம்பந்தப்பட்ட நிறுவ னங்களின் அதிகாரிகள் பங்கேற்றனர். (ச-இ)

# வெள்ளிவிழா நடைபவனி

யாழ்ப்பாணம், டிசெ. 2

யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்தின் வெள்ளிவிழாவை முன் னிட்டு கடந்த செவ்வாய்க்கிழமை மாபெரும் நடைபவனி இடம்பெற்றது.

துரையப்பா விளையாட்டரங்கில் இருந்து ஆரம்பமான நடைபவனி குருநகர் உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனம் வரை சென்று நிறைவுற்றது. பேரணியில் விரிவு ரையாளர்கள், மாணவர்கள், உயர் தொழில் நுட்பவியல் கல்லூரி மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்பவியல் கல்லூரியின் 25 ஆவது ஆண்டு நிறைவு விழா, யாழ். உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் பேராசிரியர் சமிந்த மகேஷ் எதிரிசிங்க தலைமையில் எதிர்வரும் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தந்தை செல்வா கலையரங்கில் கோலாகல மாக நடைபெறவுள்ளது என்று தெரிவித்துள் ளனர். (ஒ-14-27)

# இன்றைய நாள் (ராசிபலன்)



**மேடம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். தந்தையின் நீண்டநாள் விருப் பத்தை நிறைவேற்றி மகிழ்வீர்கள். மனதில் தன்னம்பிக்கை அதிகரிப்பது டன் உற்சாகமும் பெருக்கெடுக்கும்.

**இடபம்:** தாயின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். தாயாரின் தேவைகளை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுவீர்கள். சிலருக்கு பணவரவு இருந்தாலும் திடீர் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு.

**மிதுனம்:** புதிய முயற்சிகளை தொடங்கு வது சாதகமாக முடியும். உறவினர்கள் மூலம் சுபநிகழ்ச்சி ஒன்று ஏற்பாடாகும். சிலருக்கு வீண் அலைச்சலுடன் உடல் அசதியும் ஏற்படக்கூடும்.

**கடகம்:** மனதில் இனம் தெரியாத சோர்வு ஏற்படக்கூடும். எதிர்பார்த்த பணம் கிடைப்பது தாமதமாகும். ஆனால், சில சிரமங்கள் ஏற்படும். சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**சிம்மம்:** எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சி களுக்கு ஒத்துழைப்புத் தருவார். அவர் மூலம் உங்களுக்குத் தேவையான உதவி களும் கிடைக்கும்.

**கன்னி:** நீண்ட நாள்களாக நீங்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த நல்ல [illegible] பேசும்போது பொறுமை அவசியம்.

**துலாம்:** திடீர் செலவுகள் ஏற்படும். தேவையான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். புதிய முயற்சி களைத் தவிர்க்கவும்.

**விருச்சிகம்:** காரியங்களில் அனு கூலம் உண்டாகும் நாள். தந்தை வழியில் ஆதாயம் கிடைப்பதுடன் செலவுகளும் ஏற்படும். மறைமுக எதிர்ப்புகள் விலகும்.

**தனுசு:** மனதில் தன்னம்பிக்கை அதி கரிக்கும். எதிர்பார்த்த காரியங்கள் அனு [illegible]மாக முடியும். தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். பணிகளில் சுறு சுறுப்பாக ஈடுபடுவீர்கள்.

**மகரம்:** சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சிலருக்கு திடீர் பணவர வுக்கு வாய்ப்பு ஏற்படும். புதிய முயற்சி கள் சாதகமாக முடியும்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் எதிலும் ஈடுபடவேண்டாம். உடல் ஆரோக்கி யத்தில் கவனம் தேவை. சிலருக்கு குடும்பம் தொடர்பான பணிகளுக்காக சற்று அலைச்சல் ஏற்படும்.

**மீனம்:** மன உறுதியுடன் செயற் படுவீர்கள். செலவுகள் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதால் சிலருக்குக் கடன் வாங்கவேண்டிய மகிழ்ச்சி உண்டா கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆதனம் தொடர்பான அறிவித்தல்

“10 ஆம் வட்டாரம் முத்தட்டு வீதியில் அமைந்துள்ள ஆதன இலக்கம் 05 இனுடைய ஆதனமானது எனது கணவரான **பாலகிருஸ்ணன் கிருஸ்ணபாலாவிற்கு** உரியதாகும்.” குறித்த ஆதனத்தினுடைய உறுதி இலக்கம் 6631/02.02. 2012. பிரசித்த நொத்தாரிசு **ஞானலோயினி சிவஞானம்.** மேலும் இது தற்போது எனது கட்டுப்பாட்டிலேயே உள்ளது. இவ்வாதனம் தொடர்பான கோரிக்கைகள் ஏதேனும் இருப்பின் **+94767332276** அல்லது **+447828669412** ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்குத் தொடர்பு கொள்ளவும்.


**சிவநிதி இராஜரட்ணம்**

## மாநகரசபை, யாழ்ப்பாணம்
### நல்லூர் உற்சவகால தற்காலிக கடைகளுக்கான பிணைப்பண வைப்பு மீளளிப்பு (2018, 2019)

யாழ் மாநகர சபையில் 2018, 2019ஆம் ஆண்டுகளின் நல்லூர் உற்சவ கால தற்காலிக கடை கேள்வி கோரலுக்கான வைப்புப்பணமானது இதுவரை காலமும் உரியவர்களால் மீளப்பெறப்படாமல் வைப்பில் காணப்படுகின்றது. இதனை உரிய ஆதாரங்களை சமர்ப்பித்து 2022.12.23 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளவும். 2022.12.23 ஆம் திகதிக்கு முன்னர் மீளப்பெறப்படாத வைப்புக்கள் யாவும் மாநகர சபையின் வருமானக்கணக்கிற்கு மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப் படும் என்பதை அறியத்தருகின்றேன். இது தொடர்பான மேலதிக தகவல்களை யாழ் மாநகர சபையின் முன்னரங்கு அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

முதல்வர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

## 12 ஆவது வருஷாப்திக நினைவாஞ்சலி



சங்கானை இலுப்பைத்தாழ் ஸ்ரீ சிவசுப்பிரமணியர் தேவஸ்தான பரம்பரைக் குரு முதல்வர், பாரத்வாஜ கோத்திரம், “சிவாகமானுசாரித சார்த்தூல”

**சிவப்பிரம்மஸ்ரீ சிவானந்த நித்தியானந்த சிவாச்சாரியார்**

**அவர்களின் 12 ஆவது வருஷாப்திக "நிலைவாஞ்சலி"**

வெல்வில் பதியானின் சமயாசாரப் பணிகளில் தலைமுறை வழியாக ஆன்மீக ஆட்சி புரிந்த செம்மல், சங்கானை பாரத்வாஜகோத்திரம், சுந்தர சிவானந்தக் குருக்கள், கேரளத்து திருச்சூர் பாவையாம் ஸ்ரீமதி சீதாலக்ஷ்மி அம்மா தம்பதிகளின் இளையமகனாய் அவதரித்து இலுப்பைத்தாழ் ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானத்தை மையப்படுத்திய ஒரு பெரும் ஆதீனம். வலிமேற்கு ஆளுகை மட்டுமல்ல இலங்கையின் பெரும்பான்மையான தேவஸ்தானங்களில் அந்தணர் இல்லங்களில் இவரின் சமய, வைதீக கர்மானுஷ்டானங் கள் நிலைபேறானவை பேரொழுக்கமே பேராண்மை என்று வாழ்ந்து காட்டிய ஐயாவின் திருவுருவப் படம் ஊரவரின் அநேகம் பேர் வீடுகளில் இன்றும் சுவாமி அறையில் சங்கானை மக்களோடு என்றுமே பிரிக்கப்பட முடியாதவர். குருவுக்கே உரிய இலட்சணங்களோடு உண்மையாய், உயர் குருவாய் வாழ்ந்தவர். அந்த உத்தமரின் வாழ்வு கொள்ளை எனும் பேரில் சூறையாடப்பட்டு இன்றோடு பன்னிரு வருடங்கள். குரு மஹானின் புனித ஆன்மா நிச்சயம் இறையடியில் சாந்திபெற்றிருக்கும் என்பதில் ஐயம்மில்லை

**சிவப்பிரம்மஸ்ரீ சிவா நித்தியானந்த சிவாச்சாரியார் குடும்பம்**
**முருகமூர்த்தி கோவில், சங்கானை.**

(CS 47830) (3/6)

## TABLE TENNIS
### பயிற்சி வகுப்புக்கள்

சாவகச்சேரியில் Table Tennis (மேசைப்பந்து) பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.
107, கச்சாய் வீதி,
(ஸ்ரீமுருகன் கோயில் முன்பாக)
தொடர்புகளுக்கு:திரு.ப.பரணி **077 5797 590**

## பூசகர் தேவை

**கோண்டாவில் வடக்கு வீரபத்திரர் ஆலயத்திற்கு காலை, மாலை நித்திய பூசைகளுக்கும்** மற்றும் **அபிஷேகங்களுக்கு ஒரு அந்தண குருக்கள் தேவைப்படுகின்றது.** விரும்பியவர்கள் கீழ்காணும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளவும்.

**071 745 7484, 077 774 3055**

(cs 22046) (2..6). **நிர்வாகம்**

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், டிசெ. 2

புங்குடுதீவு மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் ஆரம்பித்தல் தொடர் பான கலந்துரையாடல் நாளை சனிக் கிழமை மு.ப. 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் பாடசாலை அதிபர் ஏ.விம லேந்திரன் தலைமையில் நடைபெற வுள்ளது.

கலந்துரையாடலில் புங்குடுதீவு மத்திய கல்லூரியின் பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அறிவிக் கப்பட்டுள்ளது. (ச)

## வவுனியா வடக்கு பிரதேச சபை, வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல் -2023

எமது சபையானது 2023ஆம் ஆண்டுக்கான கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் சேவைகளை வழங்குவதற்குத் தம்மை பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங் குனர்களிட மிருந்து விண்ணப்பங்களை ஏற்கவுள்ளது.

விண்ணப்பபத்திரம் வழங்கும் திகதி : 2022.12.05 தொடக்கம் 2022.12.19 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 தொடக்கம் பி.ப 3.00 வரை

விண்ணப்பபத்திரம் ஏற்கும் கடைசித் திகதி : 2022.12.19 பிற்பகல் 02.00 மணி

**01. பொருட்கள்**

1) காகிதாதிகள் பொருள்கள் எழுது பொருள்கள்
2) அலுவலக உபகரணங்கள்
3) நூலகங்களுக்கான நூல்கள்
4) துணி வகைகள்
5) கட்டடப்பொருட்கள் ( சீமெந்து, ஓடுகள், கம்பி வகைகள் கொங்கிறீட் தூரண்கள், சீமெந்து கற்கள் )
6) கற்கள், மணல், கிரவல்
(7) தீந்தைகள் வகைகள் (Paints) மற்றும் நிறம் தீட்டும் பொருட்கள்
8) நீர் வழங்கும் குழாய்கள். கியூம் பைப்புக்கள் (Hume Pipes) மற்றும் ஏனைய பொருட்கள்
(9) வாகன உதிரிப்பாகங்கள். துணைபொருட்கள்
10) மின் வழங்கும் பொருட்கள். மின்பாவனைப் பொருட்கள்
(11) எரிபொருள் உராய்வு நீக்கிகள்
12) இரும்பு பொருட்கள்
13) தீராந்திகள், பலகைகள்
14) பனைமரங்கள், சலாகைகள்
15) வாகனங்களுக்கான டயர் ரியூப் மற்றும் மின்கலன்கள்
16) கணினி. பிரதியாக்கல் இயந்திரம் மற்றும் இவற்றுக்கான உதிரிப்பாகங்கள்
17) சுத்திகரிப்புப் பொருட்கள், கிருமி நாசினிகள்
18) பாதணிகள் தோற்பொருட்கள்
19) அலங்காரப் பொருட்கள்
20) தளபாட உபகரணங்கள்

**02.சேவைகள்**

1) அச்சிடுதல் புத்தகங்கள் கட்டுதல்
2) மோட்டார் வாகன பராமரிப்பு மற்றும் திருத்தங்கள்
3) ஒட்டு வேலைகள்
4) மின்சாதனங்கள் திருத்தம், மீள மின்வலுவூட்டல் (Battery Charge)
5) இலத்திரனியல் சாதனங்கள்
(6) வாகனங்கள் டயர் வேலைகள்
7) கோலவுடை, சீருடை தைத்தல்
8) கணினி பிரதியாக்கல் இயந்திரம் திருத்தல், மற்றும் பராமரிப்பு
9) இறப்பர் முத்திரை தயாரித்தல்
10) தீயணைப்பு கருவி மீள் நிரப்புதல்

**03. ஒப்பந்த வேலைகள்** (ICTAD/CIDA ) **பதிவு உள்ளவர்கள் மட்டும்**

1) கட்டட நிர்மாண வேலைகள்
2) கிணறு அமைத்தல்
3) வீதி நிர்மாணம், திருத்த வேலைகள்

இப்பதிவானது ஒவ்வொரு வழங்கல் சேவைக்கும் தனித்தனியான விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும். படிவங்களை சபையின் தலைமை அலுவலகத்தின் நிதிக் கிளையில் பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் பதிவுக் கட்டணமாக ரூபா 1000.00 செலுத்தப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **வழங்கல் சேவைக்கான விண்ணப்பம் 2023** எனக் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் தவிசாளர், வவுனியா வடக்கு பிரதேச சபை, நெடுங்கேணி, வவுனியா எனும் முகவரிக்கு அனுப்பிவைக் கப்படல் வேண்டும். விண்ணப்பப் படிவங்கள் 19.12.2022 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும். மேலதிக விபரங்களுக்கு 024-2030200 எனும் இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

**செயலாளர்,**
**வவுனியா வடக்கு பிரதேச சபை, நெடுங்கேணி.**

(cr.38597) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## பாஸ்கரராசன் சுகந்தி

(பனை அபிவிருத்திச் சபையின் போதனாசிரியர்)

சாவகச்சேரி மட்டுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், இத்தாலியை வசிப்பிடமாகவும் கொண்ட பாஸ்கரராசன் சுகந்தி 09.11.2022 அன்று இத்தாலியில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் திரு. பாஸ்கரராசனின் அன்பு மனைவியும், ஸ்னேகன், ஸ்ரேகன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற கவிஞர் முருகு கந்தராசா மற்றும் யோகம்மா தம்பதியரின் ஏக புத்திரியும், காலஞ்சென்ற வல்லிபுரம் மற்றும் நாகம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இத்தாலியிலுள்ள ஜெனோவா சறவாலை என்னுமிடத்தில் இன்று (02.12.2022) வெள்ளிக்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தோற்றம் 07.04.1971

மறைவு 09.11.2022

பாஸ்கரன் 0039 320 233 7982

மணி 075 219 7106

தகவல்: குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



## திருமதி சங்கரப்பிள்ளை அபிராமிப்பிள்ளை

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் செட்டித்தெரு நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சங்கரப்பிள்ளை அபிராமிப்பிள்ளை அவர்கள் 28.11.2022 திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னார் வயித்திலிங்கம் சங்கரப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பொன்னம்பலம் - மீனாட்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற வயித்திலிங்கம் - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மருமகளும், சிந்தாமணி, குணசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான பொன்னையா, திருமதி தெய்வானைப்பிள்ளை கணபதிப்பிள்ளை, பொன்னம்பலம், சுப்பிரமணியம், திருமதி சின்னத்தம்பி காங்கேசு, குமாரசாமி, ஐயாத்துரை ஆகியோரின் மைத்துனியும், சத்தியவரதன் (கட்டப்பிராய்), நிர்மலா (நல்லூர்), கிருபாவரதன் (நெடுந்தீவு), கோகுலவரதன்(இலண்டன்), சந்திரகலா (நல்லூர்), விஜயலதா (லண்டன்), பத்மவரதன் (கனடா), தவமேகலா (லண்டன்), பானுகலா (பிரான்ஸ்), அருள்வரதன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், மஞ்சுளா (கட்டப்பிராய்), சிறிகரன் (நல்லூர்), பாக்கியலட்சுமி (நெடுந்தீவு), சகுந்தலாதேவி (லண்டன்), புவனேந்திரா (நல்லூர்), தருமரத்தினம் (லண்டன்), பொன்மதி (கனடா), செல்வராசா (லண்டன்), சபேசன் (பிரான்ஸ்), ஜானகி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், குமரன், குகப்பிரியன், ஜனகன், துவாரகன், மகிபன் நிருஜன், கினோஜா, மதுஷன், நிரோஷன், கிந்துஜன், அபியதர்சன், விட்டலன், லக்சினி, யனுசா, தனுசா, அனுராஜ், அபிராஜ், பானுசன், டினோசா, கபிசன், அபிசன், ஆருத் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 04.12.2022ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் ஆரம்பமாகி மு.ப.11.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிறப்பு 09.12.1935

மறைவு 28.11.2022

077 982 5051

தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## விசேட தேவையுடையோர் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், டிசெ. 2

கருவி விசேட தேவையுடையோரின் சமூகவள நிலையத்தால் சர்வதேச விசேட தேவையுடையோர் தின நிகழ்வுகள் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தெல்லிப்பழை இராஜேஸ் வரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

கருவி நிறுவனத் தலைவர் க.தர்மசேகரம் தலைமையில் இடம் பெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.போதனா மருத்துவமனை மருத்துவக் கலாநிதி. சி.சிவன்சுதன் கலந்து கொள்ளவுள்ளார். (ஓ-14)

* * *

யாழ்ப்பாணம், டிசெ. 2

யாழ்.விழிப்புலனற்றோர் சங்கம் நடத்தும் சர்வதேச விசேட தேவையுடையோர் தின விழா, நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு ஊரெழு, பலாலி வீதி என்.கே. மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

யாழ். விழிப்புலனற்றோர் சங்கத் தலைவர் எஸ்.வை.சுதாகரன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக கல்வி அமைச்சின் வட மாகாண சிரேஷ்ட உதவிச் செயலாளர் நளாயினி இன்பராஜ் கலந்துகொள்ளவுள்ளார். (ஓ-14)


### பணிப்பெண் தேவை
(உதவியாளர்)

வீட்டு வேலைக்கு உதவியாளர் தேவை. உணவு, தங்குமிட வசதிகளுடன் சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கலாம். தரகர்கள், நிறுவனங்களுக்கூடாக தொடர்பு கொள்ள வேண்டாம்.

தொடர்பு: 075 484 71 71
இடம் வடமராட்சி


### கண்ணீர்க் காணிக்கை



எமது பாடசாலை ஆசிரியரான
திரு.இ.ராஜ்குமார் அவர்களின் தந்தையார்
**அமரர் கனகசபை இராஜேஸ்வரன்**
மலர்வு:26.03.1946 உதிர்வு:28.11.2022
அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு. அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
**பிரிவினால் துயருறும்:**
**யா/ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலய பாடசாலைச் சமூகம்.**
(CS 22058)1-6

## கூட்டுறவுப் பெரியாரின் 58 ஆவது நினைவுதினம்

யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபையின் ஏற்பாட்டில் கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கத்தின் 58 ஆவது நினைவுதினம், எதிர்வரும் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ஓ-14)

## யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச்சபை பதவி வெற்றிடங்கள்

**கணினிப்பக்க வடிவமைப்பாளர் - தரம் 323/16**

**சம்பளத்திட்டம்** :- 16975-135x10-150x10-19825 (கூ.வே.ஆணைக்குழு சுற்றறிக்கைக்கு அமைய ஏனைய படிகள் வழங்கப்படும்)

**கல்வித்தகைமை**

க.பொ.த.சாதாரணதரப் பத்திர பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம் / தமிழ்மொழி, கணிதம் என்பவற்றை உள்ளடக்கி 06 பாடங்களில் சித்தியுடன் கணினிப்பக்க வடிவமைப்பாளர் பதவியில் யாதாயினும் நிறுவனமொன்றில் 02 வருட கால அனுபவத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**இயந்திர இயக்குநர் - தரம் 328/14**

**சம்பளத்திட்டம்** :- 17900-155x10-165x10-21100 (கூ.வே.ஆணைக்குழு சுற்றறிக்கைக்கு அமைய ஏனைய படிகள் வழங்கப்படும்)

**கல்வித்தகைமை**

1. கூட்டுறவு ஊழியர் 15வது சம்பளத்திட்டப் பதவியொன்றில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்.
அல்லது
2. கூட்டுறவு ஊழியர் கனிஷ்ட தராதரப்பத்திரம் / 08ம் தர கல்விச் சான்றிதழ்

**வெட்டுனர் தரம் 321/14**

**சம்பளத்திட்டம்** :- 17900-155x10-165x10-21100 (கூ.வே.ஆணைக்குழு சுற்றறிக்கைக்கு அமைய ஏனைய படிகள் வழங்கப்படும்)

**கல்வித்தகைமை**

1. கூட்டுறவு ஊழியர் 15வது சம்பளத்திட்டப் பதவியொன்றில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம். / கூட்டுறவு ஊழியர் 16வது சம்பளத்திட்டப் பதவியொன்றில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.
அல்லது
2. கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி / க.பொ.த.சாதாரணதரப் பத்திர பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம் / தமிழ்மொழி. கணிதம் என்பவற்றை உள்ளடக்கி 06 பாடங்களுடனான சித்தியுடன் சம்பந்தப்பட்ட துறையில் 01 வருட கால அனுபவத்தினை கொண்டிருத்தல் வேண்டும்.

- வயதெல்லை :- 18 - 45 (கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வயதெல்லை ஏற்புடையதல்ல. )
- விண்ணப்ப முடிவுத்திகதி :- 15.12.2022
- விண்ணப்பிக்க வேண்டிய முகவரி :- செயலாளர், யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச்சபை,
வீரசிங்கம் மண்டப கட்டடத்தொகுதி 2ம் மாடி,
இல 12 கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

விண்ணப்பப் படிவத்தை சபையின் கடமை நேரத்தில் ரூபா 20 செலுத்தி பெற்று விண்ணப்பிக்கவும் (சான்றிதழ்களின் பிரதிகள் யாவும் இணைக்கப்பட வேண்டும்.)

01.12.2022

செயலாளர்
யா.மா.கூ.சபை

# மரண அறிவித்தல்

## தனபாலசிங்கம் சுரேந்தர் (Sell Travels உரிமையாளர்)



அரியாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தனபாலசிங்கம் சுரேந்தர் (Sell Travels-உரிமையாளர்) அவர்கள் நேற்று (01.12.2022) வியாழக் கிழமை அகால மரணமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தனபாலசிங்கம்-கோமலா தம்பதியரின் அன்பு மகனும், அமரர் துரைசிங்கம் மற்றும் ஜெயந்தி தம்பதியரின் பாசமிகு மருமகனும், கிருபாலினியின் பாசமிகு கணவரும், வர்னிகா, ரித்வீன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், தினா மற்றும் அமரர் பாஸ்கரன் ஆகியோரின் உடன்பிறந்த சகோதரனும், பாலசந்திரன், சியாமளா ஆகியோரின் பெறாமகனும், துசியந்தினி, திருஞானி, கிருஷாந்தி, யாழினி ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும், அமரர் பிரதீபன் மற்றும் பிரதாப் (அலுவலக உதவியாளர்- வலயக் கல்வி அலுவலகம், கிளிநொச்சி) ஆகியோரின் மைத்துனரும், அமரர் சங்கரலிங்கம் மற்றும் புவனேஸ்வரி அமரர்களான இராசையா, சின்னத்தங்கம் மற்றும் பரமேஸ்வரி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.12.2022) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் 245/3, ஆனந்தன் வடலி வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரயிலுடன்...

பகுதியில் போராட்டங்களும் இடம்பெற்றுள்ளன. எனினும், அது இன்னமும் பாதுகாப்பற்ற ரயில் கடவையாகவே இருக்கின்றது. இதுதான் மேற்படி விபத்துக்கான காரணம் என்று அந்தப் பகுதி மக்கள் ஆவேசத்துடன் சுட்டிக்காட்டுகின்றனர். விபத்தை அடுத்து நேற்று விசாரணைக்காக (சம்பவ இடக்கண்காணிப்பு விசாரணைக்காக) வந்த பொலிஸாருடனும் பொதுமக்கள் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இன்னும் எத்தனை உயிர்கள் இந்த ரயில் கடவையால் பறிபோகவேண்டும் என்று எதிர்பார்க்கின்றீர்கள்? பொதுமக்கள் கேள்வியெழுப்பி குழப்பத்தில் ஈடுபட்டதையடுத்து, அந்தப் பகுதிக்கு மேலதிகமாக பொலிஸாரும் சிறப்பு அதிரடிப் படையினரும் குவிக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டது. இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார்.

(அ-ம-26-27-125-20-113)

## குளத்தில்...

நிலையில் நேற்று வியாழக்கிழமை சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

வரணி, குடமியன் பகுதியிலுள்ள குளத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை குளிக்கச் சென்ற மகாலிங்கம் மணிவண்ணன் (வயது-38) என்பவரே நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இறப்புத் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ-ச-26)

## பொருத்தமற்றோரை...

பெறுவதற்கு தகுதியானவர்களுக்கு அது கிடைப்பதில்லை. எனவே, பொருத்தமற்றவர்களை அப்புறப்படுத்தினால், தகுதியுடைய அனைவருக்கும் சமுர்த்தி வழங்க முடியும். சிலர், 20 வருடங்களாக சமுர்த்தி பெறும் பட்டியலில் இருக்கின்றனர். இவ்வாறு தொடர்ந்து செய்ய முடியாது. எனவே, தகுதியானவர்கள் யார் என்பதையும், புதிதாக யாரை இணைத்துக் கொள்ளவது என்பதையும் கண்டறியவேண்டும்.

சிலர் இதனை அரசியல் செயற்பாடாகப் பார்க்கக்கூடும். எனினும், உண்மையில் சமுர்த்தி உதவி தேவையானவர்களுக்கு அதனை வழங்கவேண்டும். சமுர்த்தியைப் பெற தகுதியற்றவர்கள் அந்தப் பட்டியலில் இருந்து நீக்கப்படவேண்டும். அனைவருக்கும் சமுர்த்தி வழங்க எம்மிடம் பணம் இல்லை. நாட்டையும், சமூகத்தையும் கட்டியெழுப்பவேண்டும். எடுக்கும் சில தீர்மானங்கள் பிரபலமானதாக இருக்காது. எனினும், இந்தப் பணிகளை முன்னெடுப்பதற்கான பலம் நாடாளுமன்றத்துக்கு இருக்கவேண்டும்' - என்றார்.

ஜனாதிபதி ரணில், தனது வரவு - செலவுத்திட்ட உரையில், 'நாடு இன்று இந்த நிலைமைக்கு இருக்கின்றமைக்குக் காரணம், பல சந்தர்ப்பங்களில் சரியான முடிவுகள் எடுக்கப்படுவதற்குப் பதிலாக பிரபலமான முடிவுகள் எடுக்கப்பட்டமையே' என்று தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

## போதையை...

பாதாளக் குழுக்களை ஒடுக்குதல் மற்றும் போதைப்பொருள் விற்பனையைத் தடுத்தல் போன்ற நடவடிக்கைகளுக்காக விசேட அதிரடிப்படையினரை முழுமையாக ஈடுபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எஸ்.ஹெட்டியாராச்சி நேற்றுத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'போதைப்பொருளுக்கு அடிமையானவர்களால் சிறைச்சாலை நிரம்பியுள்ளது. அத்துடன், ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்தால் மரண தண்டனை விதிக்கும் வகையில் தற்போது சட்டத் திருத்தமும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, புனர்வாழ்வளிக்கும் வேலைத் திட்டத்தை விரைவுபடுத்த வேண்டியுள்ளது. போதைப்பொருளுக்கு அடிமையானவர்களை சிறைச்சாலைக்குக் கொண்டுவராமல், அவர்களுக்கு புனர்வாழ்வளித்து சமூகமயப்படுத்தல்பற்றி கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

போதைப்பொருள் என்பது சர்வதேச வலைப்பின்னலுடன் தொடர்புபட்டது. பாதாளக்குழுக்களுடன் தொடர்புபட்டுள்ளது. இவற்றை கட்டுப்படுத்துவதென்பது இலகுவான விடயமல்ல. போதைப்பொருள் விவகாரம் தொடர்பில் விசேட அதிரடிப்படையினர் ஈடுபடுத்தப்பட்டுவருகின்றனர். எதிர்காலத்தில் பாதாளக் குழுக்களைக் கட்டுப்படுத்தல் மற்றும் போதைப் பொருளை தடுத்தல் போன்ற பணிக்காக மட்டும் விசேட அதிரடிப்படை முழுமையாக ஈடுபடுத்தப்படும். இதன் முதற்கட்டமாக ஏனைய பணிகளில் இருந்து விசேட அதிரடிப்படையினர் விடுவிக்கப்படவுள்ளனர். 600 பேரை விசேட அதிரடிப்படைக்கு இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்' - என்றார். (அ-ம-44)

## கடலட்டைப்...

மொன்று அனலைதீவு இறங்குதுறையில் மேற்கொள்ளப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

சட்டவிரோத கடலட்டைப் பண்ணைகளை அகற்றுமாறு வலியுறுத்தி, கடந்த நான்கு நாள்களாக அனலைதீவு மீனவர்கள் தொழில் நிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-20)

**(தொடர்புடைய செய்தி 3ஆம் பக்கத்தில்)**

## மாநகரசபை...

மாநகரசபையால் நேற்று வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் மாநகரசபையின் முறையற்ற கழிவகற்றலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, கழிவகற்றல் வாகனங்களை நேற்றும் நேற்றுமுன்தினமும் இடைமறித்து வலி. தென்மேற்கு பிரதேசசபையினர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். நேற்று இரண்டாவது நாளாகவும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இந்த நிலையிலேயே வலி. தென்மேற்குப் பிரதேசசபையினர் தமது கடமைக்கு இடையூறு விளைவிக்கின்றனர் என்று தெரிவித்து யாழ்ப்பாணம் மாநகரசபையின் சுகாதார மேற்பார்வையாளர் ஒருவர் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு செய்தார். அத்துடன் மல்லாகம் நீதிமன்றத்திலும் யாழ்ப்பாணம் மாநகரசபையினரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்குப் பதிலடியாக நீதிமன்ற உத்தரவுக்கு முரணாக தமது ஆளுகைக்கு உட்பட்ட பகுதியில் கழிவகற்றல் செயற்பாட்டை யாழ்ப்பாணம் மாநகரசபை மேற்கொள்கின்றது என்று தெரிவித்து வலி. தென்மேற்கு பிரதேசசபையின் தவிசாளர் ஜெபநேசனால் மானிப்பாய் பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது. இது குறித்து அடுத்தகட்ட சட்டநடவடிக்கைகள் விரைந்து மேற்கொள்ளப்படும் என்று ஜெபநேசன் தெரிவித்துள்ளார். (அ-ம-26-125)

## 56 வீதமான...

56.8 என்பது பொதுமைப்படுத்தப்பட்ட எண்ணிக்கை. இவர்களில் 18 - 29 வயதுக்கு இடைப்பட்டவர்களில் 77.2 வீதமானவர்கள் இலங்கையை விட்டு வெளியேறி வேறு நாடுகளில் வாழ்வதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர். 30 வயதுக்கு மேற்பட்டவர்களில் 45.4 வீதமானவர்கள் இலங்கையை விட்டு வெளியேறுவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர் எனவும் அந்தக் கருத்துக்கணிப்பில் தெரியவந்துள்ளது.

கடந்த ஒரு வருடமாக நாட்டில் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடி, பொருளாதார இடர் நிலைமைகள் காரணமாக தொடர்ச்சியாகப் பலரும் நாட்டைவிட்டு வெளியேறி வருகின்றனர். புத்திஜீவிகள் மற்றும் இளைஞர்களின் வெளியேற்றம் காரணமாக நாடு மேலும் மேலும் பொருளாதாரப் பின்னடைவை எதிர்கொள்ளும். உழைக்கும் வர்க்கத்தின் இழப்பால் நாடு பொருளாதாரச் சுழற்சியில்லாமல் திண்டாடும் என்று நாடாளுமன்றத்திலும் வெளியிலும் தொடர்ச்சியாகச் சுட்டிக்காட்டப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(அ-ம)

## வவு. இரட்டைக்...

நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் நேற்றுத் தீர்ப்பளித்தார்.

2012ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 19ஆம் திகதி வவுனியா பன்றிக்கெய்த குளம் பகுதியில் உள்ள வீடொன்றில் வசித்த கந்தையா முத்தையா மற்றும் அவரது மனைவி பரமேஸ்வரி இருவரும் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டனர். சம்பவத்தையடுத்து அவர்களது வீட்டில் தோட்ட வேலைகளுக்கு அமர்த்தப்படும் சாஸ்திரியார் கூழாங்குளத்தைச் சேர்ந்த சகோதரர்களான சிங்காரு சத்தியசீலன், சிங்காரு சதீஸ்வரன் ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டனர்.

வவுனியா நீதிவான் நீதிமன்றில் சுருக்கமுறையற்ற விசாரணைகள் நிறைவடைந்த நிலையில் எதிரிகள் இருவருக்கும் எதிராக கொலை, கொள்ளை குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வவுனியா மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் முன்னிலையில் விளக்கம் இடம்பெற்று வந்தது. கொல்லப்பட்டவர்களின் மகள், பொலிஸார், நிபுணத்துவ சாட்சிகள் மற்றும் எதிரிகள் தரப்பு சாட்சிகள் நிறைவடைந்து வழக்கு நேற்றுத் தீர்ப்புக்காக நியமிக்கப்பட்டது.

'சாட்சிகளின் அடிப்படையில் முதலாவது எதிரி, பரமேஸ்வரி என்பரை உயிர் போகும்படி கூரிய ஆயுதத்தால் தாக்கியமை மற்றும் அவரது நகைகளை கொள்ளையிட்டமை மற்றும் முத்தையாவை உயிர்போகும்வரை கூரிய ஆயுதத்தால் தாக்கியமை என்பன நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளது. அதனால் அவரைக் குற்றவாளியாக உறுதிசெய்து இரட்டை தூக்குத் தண்டனையும் 20 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனையும் விதிக்கப்படுகிறது. தூக்குத் தண்டனை குற்றவாளியை இலங்கை ஜனாதிபதி தீர்மானிக்கும் நாளில், உயிர் பிரியும்வரை தூக்கிலிட்டு தண்டனை நிறைவேற்றப்படவேண்டும்.

இரண்டாவது எதிரிக்கு எதிராக முன்வைக்கப்பட்ட சாட்சியங்கள் நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் நிரூபிக்கப்படாத நிலையில் அவர் விடுதலை செய்யப்படுகிறார்' என்று மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் தீர்ப்பளித்தார். (அ-ம-26-18)

## பொட்டாசியம்...

டுள்ளது என்றும் விவசாயிகள் பொருத்தமான அறிவுறுத்தல்களைப் பின்பற்ற வேண்டும் என்றும் வடமாகாண பதில் விவசாயப் பணிப்பாளர் ஸ்ரீ.அஞ்சனா தேவி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். மாவட்டதில் சுமார் 13 ஆயிரம் ஹெக்ரேயர் விஸ்தீரணத்தில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், நெற்பயிர்கள் பொட்டாசியக் குறைவால் நுனி கருகிப் பாதிப்படையும் நிலை ஏற்பட்டுள்ளது. சாவகச்சேரி, கைதடி, நவாலி, கோப்பாய், கரவெட்டி, சண்டிலிப்பாய், காரைநகர் போன்ற பல பகுதிகளில் இந்த நிலைமை அவதானிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குறைபாட்டின் ஆரம்ப அறிகுறியாக முதிர்ச்சி அடைந்த இலைகள் கடும் மஞ்சள் நிறமாவதோடு பொட்டாசியப் பற்றாக்குறை அதிகமாகும்போது இலைகள் நுனியில் இருந்து அடிவரை செம்மஞ்சள் நிறத்திலிருந்து மஞ்சள் அல்லது கபில நிறமாக மாறும். அதாவது இலையின் நுனிப்பகுதியல் தலைகீழ் 'வி' (v) வடிவில் எரிவுகள் ஆரம்பிக்கும். இலை நுனிப்பகுதியில் இருந்து படிப்படியாக இறக்கத் தொடங்கும். இதன் காரணமாக நெல் மணிகள் பதர் ஆகும். இதனால் பெரியளவு உற்பத்தியிழப்பு ஏற்படும்.

இந்த அழிவு நிலையில் இருந்து நெல்களைக் காப்பாற்றுவதற்காக விவசாயிகள், பொட்டாசியம் அடங்கிய இரசாயனப் பசளைகளை பரிந்துரைக்கமைய பயன்படுத்தவேண்டும். பொட்டாசியம் அடங்கியதிரவப்பசளையைபரிந்துரைக்கமைய விசிறல் வேண்டும், மேலும் வைக்கோலில் அதிகளவு பொட்டாசியம் காணப்படுவதால் அடுத்த போகத்தில் வைக்கோலை இட்டு உழவுசெய்ய வேண்டும்.

நெல் அடிக்கட்டைகளை அறுவடையின் பின்னர் உழுதுவிடல், கிளிசிரிடியா இலைகளை வயலில் தூவிவிடல் மூலமும் நைதரசன் மற்றும் பொட்டாசியம் என்பவற்றை நெற்களுக்குக் கிடைக்கச் செய்யலாம் - என்றார். (ம-20-27)

## மக்களை...

மேலும்மேலும் வதைக்கும் மனிதத் தன்மையற்ற முடிவு என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றத்தில் நேற்று வலியுறுத்தினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த காலங்களில் மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்டபோதிலும், அது மின்சார சபையின் நட்டத்தை ஈடுகட்ட போதுமானதாக இல்லை என்பதால் மின்சாரக் கட்டணத்தை மீண்டும் அதிகரிப்பது தொடர்பில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. நாட்டு மக்கள் நெருக்கடிக்குள் வாழும் நிலையில், மின்சாரக் கட்டணத்தை மீண்டும் அதிகரித்தால் மக்கள் எவ்வாறு வாழ்வது? இப்படியான மனித நேயமற்ற முடிவுகள் எடுக்கப்படக் கூடாது' - என்றார். (அ-ம-44)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மின்கட்டணம் அதிகரிப்பு இன்னமும் முடிவில்லை!

## பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 2

மின்கட்டண உயர்வு தொடர்பில் எந்தவிதத் தீர்மானமும் இன்னமும் எடுக்கப்படவில்லை. மின்கட்டண உயர்வை அறிவிக்கும் தீர்மானத்தை எடுக்கும் அதிகாரம் எம்மால் வழங்கப்படவேண்டும் என இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்னநாயக்க நேற்று தெரிவிக்கையில்;

அடுத்த ஆண்டு ஜனவரி மற்றும் ஜூன் மாதங்களில் இரண்டு கட்டங்களாக மின் கட்டணத்தை அதிகரிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது என இலங்கை மின்சாரசபை அறிவித்துள்ளது.

இலங்கை மின்சாரசபையில் தற்போது ஏற்பட்டுள்ள நட்டத்தை ஈடு செய்ய வேண்டுமாயின் மின்கட்டணம் 70 சதவீதத்தால் அதிகரிக்கப்பட வேண்டும் என அதன் பிரதிநிதிகள் குறிப்பிட்டனர்.

இதற்கு பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அனுமதியைப் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது எனவும் இலங்கை மின்சாரசபையின் மேலதிக பொதுமுகாமையாளர் ரொஹான் செனவிரத்ன தெரிவித்தார்.

ஆயினும் மின்கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பில் இதுவரை எந்தவித ஆராய்வுகளையும் நாம் மேற்கொள்ளவில்லை - என்றார். (ச-இ)

## அடுத்தாண்டு...

ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் காரணமாக அடுத்த மார்ச் மாதம் இலங்கை கடும் மின்சார நெருக்கடியை எதிர்கொள்ளும். இந்த வருடம் மார்ச் மாதம் ஏற்பட்ட நெருக்கடியை விடவும் அடுத்த வருட நெருக்கடி பாரதூரமானதாக இருக்கும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அடுத்த மாதம் ஈரவலயத்தில் வறண்ட காலநிலை ஆரம்பமாகவுள்ளது. இன்றைய நிலைமை கடந்த பருவகாலத்தை விடவும் பாரதூரமானதாகவுள்ளது. முழு மின் உற்பத்தியில் 35 சதவீதம் அதாவது 810 மெகாவோட்ஸ் மின்சாரம் நுரைச்சோலை அனல்மின் உற்பத்தி நிலையத்திலேயே உற்பத்தி செய்யப்படுகிறது. எனினும் தம்மிடமுள்ள நிலக்கரியின் அளவு இரு மாதங்களுக்குக்கூட போதுமானதல்ல என்று இலங்கை மின்சாரசபை தெரிவித்துள்ளது.

மறுபுறம் தற்போது ஐரோப்பாவில் குளிர்காலம் ஆரம்பமாகியுள்ளது. எனவே அங்கு வெப்பத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதால், எரிபொருள் பாவனை வீதமும் அதிகரிக்கும். இதனால் உலக சந்தையில் டிசெம்பர், ஜனவரி மற்றும் மார்ச் மாதங்களில் எரிபொருள் விலை கணிசமானளவு அதிகரிக்கும். இவ்வாறு எரிபொருள் விலை உயர்வடைந்தால் எம்மிடம் அதனை இறக்குமதி செய்வதற்கான டொலர் இன்மையால் நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடும்.

நீர்த்தேக்கங்களில் நீர் இன்மையால் நீர் மின் உற்பத்தியும் சாத்தியமற்றதாகும். எரிபொருள் விலை அதிகரிப்பு, நிலக்கரி இறக்குமதி செய்யப்படாமை என அனைத்துக் காரணிகளும் மின் உற்பத்தியில் பெரியளவு தாக்கத்தைச் செலுத்தும். எனவே இந்த ஆண்டு மார்ச் மாதத்தை விட, அடுத்த ஆண்டு மார்ச் மாதம் பெரியளவு மின்சார நெருக்கடியை எதிர்கொள்ள நேரிடும்.

எனவே ஆணவத்துடன் செயற்படாமல், விடயம் தெரிந்தவர்களின் ஆலோசனைகளைப் பெற்று அதன்படி செயற்படுமாறு அரசாங்கத்திலுள்ள அமைச்சர்களை வலியுறுத்துகின்றோம். அதற்கமைய தற்போதிலிருந்தே உரிய திட்டமிடலையும் தயார்படுத்தல்களையும் மேற்கொள்ளுமாறு கோருகின்றோம் - என்றார். (ம)


**காணி விற்பனைக்கு**

உரும்பிராய் சந்திக்கு அண்மையில் 7 பரப்பும், ஊரெழுவில் 30 பரப்பு தோட்டக் காணியும் விற்பனைக்கு. 077 6011 135

**விற்பனை உதவியாளர்கள் தேவை. (ஆண்,பெண்)**

யாழ். நகரில் இயங்கும் பிரபல புத்தகசாலைக்கு விற்பனை உதவியாளர்கள் தேவை. புத்தக வியாபாரத்தில் போதிய அனுபவம் உள்ளவர்களும், நகருக்கு அண்மையில் உள்ளவர்களும் விரும்பத்தக்கது. சுயவிபரங்களுடன் நேரில் வரவும்.

077 964 7256
021 222 6693

**A/L 2024**

(கலை, வர்த்தகம், தொழில்நுட்பம்)
நாளை ஆரம்பம்
காலை - 8.00 மணி
DMI Jaffna

**A/L வரலாறு 2024**

ஆரம்பம்: 03.12.2022(சனிக்கிழமை)
மாவட்ட,தேசிய சாதனைகளுக்கு வழிகாட்டும் உங்கள் ஆசான்
M.பத்மன்
(B.A(Hons)History), M.A(Hons)History, P.G.D,M.E.D(R)
கற்பிக்கும் இடங்கள்
DMI ஆரியகுளம், யாழ்ப்பாணம். | உயர்கலைக் கல்லூரி குளப்பிட்டி. | BITSMANS மானிப்பாய்.
A/L 2023 அனுமதிகளும் வழங்கப்படுகின்றன.

**நாவலர் கல்வி நிலையம்**

பருத்தித்துறை வீதி,ஆனைப்பந்தி, யாழ் நகர்.
கலை
வர்த்தகம்
A/L-2024
புதிய பிரிவுகள் ஆரம்பம்
03.12.2022 சனி காலை 9 மணி
அனுமதிகளை அலுவகத்தில் பெற்றுக்கொள்ளலாம்
அலுவலக தொடர்பு: 076 1661 986

**துரித கடிதங்கள் பொதிகள் சேவை**

எங்கும் இல்லாத மிகக் குறைந்த கட்டணத்தில்
11Kg க்கு மேல் உள்ள பொதிகளுக்கு
UK - 1600/=
Germany - 2100/=
France - 2300 /=
Australia - 2900/=
Canada Normal Service - 1200/=
கிளைகள்: யாழ்ப்பாணம். கிளிநொச்சி. கொழும்பு. மன்னார். வவுனியா. திருகோணமலை. மட்டக்களப்பு.



Hotline-0777554528
321, K.K.S.Road, Jaffna.
குறிப்பு:-வேலையாட்கள் தேவை.

**கடை வாடகைக்கு**

பருத்தித்துறை வீதி, 3ஆம் கட்டை கல்வியங்காட்டில் கடை வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு 077 1750 746

**NEC- யாழ் நகர்**

பெருமாள் கோவில் அருகில்
கலை
வர்த்தகம்
A/L-2024
புதிய பிரிவுகள் ஆரம்பம்
03.12.2022 சனி காலை 8 மணி
அனுமதிகளை அலுவகத்தில் பெற்றுக்கொள்ளலாம்
அலுவலக தொடர்பு: 076 535 0999

**பொருளியற் கல்லூரி**

நாவலர் றோட், யாழ்ப்பாணம். | K.K.S.றோட், சுன்னாகம்.

**BARATHY**

சித்தன்கேணி.

எமது மூன்று நிறுவனங்களிலும்
A/L 2024
கலை, வர்த்தகப்பிரிவு
புதிய வகுப்புகள் ஆரம்ப அலகிலிருந்து
ஆரம்பம்:3/12/2022 (சனி)
எமது வழமையான நீங்கள் நன்கு அறிந்த வடபுலத்தின் பிரபலம்பெற்ற ஆசான்களினால்
Note:- உங்கள் அனுமதிகளை நீங்கள் விரும்புகின்ற மூன்று நிறுவன அலுவலகங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.
மேலதிக தொடர்புகளுக்கு:
077 376 3511

**தேவை**

அலுவலக உதவியாளர் (பெண்)
தேவை. கோண்டாவில் பகுதியில் வசிப்பவர் விரும்பத்தக்கது.
(cs.22043) (2.6) 077 480 4239


**வேலைவாய்ப்பு**



யாழ்ப்பாணத்தில் இயங்கும் ES Printers அச்சகத்திற்கு
வரவேற்பாளர் தேவை
ஆர்வம் உள்ளவர்கள் தங்கள் சுயவிவரக் கோவையுடன் இன்று (02.12.2022) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிமுதல் நண்பகல் 12.00 மணிவரை நேரில் சமுகம் தரவும்.
359, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்

தோற்றம் 08 . 03 . 1933



மறைவு 01 . 12 . 2022

### திரு.பொன்னம்பலம் கனகரெத்தினம்

குருசோ வீதி, சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும் நாரந்தனை மற்றும் ஆலடி லேன், ஊரெழு மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.பொன்னம்பலம் கனகரெத்தினம் நேற்று (01.12.2022) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் நாகம்மா தம்பதியரின் அருமை மகனும், காலஞ்சென்ற நாகரெத்தினம் சிவயோகம் தம்பதியரின் மருமகனும், சோதிமலரின் அன்புக் கணவரும், பிறேமளா (நோர்வே), பிரபாகரன் (கனடா), பாஸ்கரன், விஜிதா, பகீதரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், உதயகுமார், சசிவதனி, சுவித்தா, நாகறாஜ், லதாங்கனி ஆகியோரின் மாமனாரும், கார்த்திகா, சபேசன், விஜேந்திரன், தனுஸ், அகில்யா, பிரவீன், வருண் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.12.2022) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் ஊரெழு பொக்கணை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆலடி லேன்,
ஊரெழு மேற்கு.

தகவல்: குடும்பத்தினர்.
T.P:021 2243 285
077 3072 428
077 6122 447
(CS 22057) 1/6



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.12.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org